بسم الله الرحمن الرحيم نحمده ونصلّی علی رسوله الکریم وعلی عبده المسیح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ

# பதர்

வார இதழ் - காதியான்

The Weekly **BADAR** Qadian TAMIL

தொகுதி 3

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

இதழ் 27

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அ.கலீல் அஹ்மது

20 ஷவ்வால் 1439 ஹிஜ்ரி கமரி 5 வஃபா 1397 ஹிஜ்ரி ஷம்ஸி

5 ஜூலை 2018


## அல்லாஹ்வின் கட்டளை

وَمَا تَفْعَلُوْا مِنْ خَيْرٍ يَّعْلَمْهُ اللّٰهُ ؕ وَتَزَوَّدُوْا فَاِنَّ خَيْرَ الزَّادِ التَّقْوٰى ۫ وَاتَّقُوْنِ يٰۤاُولِى الْاَلْبَابِ

நீங்கள் எத்தகு நன்மையினைச் செய்தாலும் அதனை அல்லாஹ் அறிந்து கொள்கிறான். பயணத்திறகுத் தேவையான உணவை எடுத்துக் கொள்ளுங்கள். நிச்சயமாக மிகச் சிறந்த பயண உணவு இறையச்சமேயாகும். அறிவாளிகளே! எனக்கு மட்டுமே அஞ்சுங்கள்.

(அதிகாரம் அல் பக்கரா : 198)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறுகின்றார்கள்: நூஹ் நபியின் கப்பல் என்ற நூலில் நமது போதனைகள் அடங்கிய பகுதி எங்கு உள்ளதோ அவற்றை கண்டிப்பாக ஒவ்வொரு அஹ்மதியும் படிக்க வேண்டும். இன்னும் கூறுவதென்றால், முழு நூலையும் படிக்க வேண்டும்**

**ஈசப்னு மர்யம் [மர்யமின் மகனாகிய ஈஸா] மரணமடைந்து விட்டார் என்பதையும் அவரது கல்லறை காஷ்மீர் ஸ்ரீநகர் கான்யார் வீதியில் இருப்பதையும் உறுதியுடன் அறிந்து கொள்ளுங்கள். இறைவன் தனது புனித வேதத்தில் அவர் மரணித்துப் போனதாக அறிவித்துள்ளான்.**

## வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி [அலை] அவர்கள் எழுதிய கிஷ்தி நூஹ் [நூஹ் நபியின் கப்பல்] என்ற நூலிலிருந்து...

நீங்கள் உங்கள் உள்ளங்களை நேராக்கி நாவுகளையும் கண்களையும் காதுகளையும் தூய்மைப்படுத்தி அவன் பக்கம் வந்து விடுங்கள். அப்போது அவன் உங்களை ஏற்றுக் கொள்வான். நம்பிக்கையைப் பொருத்தவரை இறைவன் உங்களிடம் விரும்புவதெல்லாம் இறைவன் ஒருவனே என்றும் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் அவனது திருத்தூதர் என்றும், அவர்கள் காத்துமல் அன்பியாவாகவும் எல்லா நபிமார்களையும் விட மிகவும் மேலானவராகவும் இருக்கின்றார்கள் என்று நம்புவதும் ஆகும்.

மேலும் எவர் மீது முஹம்மதிய்யத்தின் பிரதிபலிப்பு எனும் போர்வை அணிவிக்கப்பட்டிருக்கின்றதோ அவனைரத் தவிர வேறு எந்த நபியுமில்லை. ஏனெனில் ஊழியன் ஒருவன் தன் எஜமானரிலிருந்து வேறு பட்டவன் அல்ல. மரக்கிளையானது தனது வேரிலிருந்து வேறுபட்டது அல்ல. எனவே எவர் முழுமையாகத் தன் எஜமானிடத்தில் தன்னையே அர்ப்பணித்துக் கொண்டு அதன் மூலம் எஜமானிரிடத்தில் தன்னையே அர்ப்பணித்துக் கொண்டு அதன் மூலம் இறைவனிடமிருந்து நபிப்பட்டத்தைப் பெறுகின்றாரோ அவர் கத்முன் நுபுவ்வத்திற்கு ஒருபோதும் பாதிப்பை ஏற்படுத்தக் கூடியவர் அல்லர்.

இது எவ்வாறு என்றால் நீங்கள் உங்களது உருவத்தை நிலைக் கண்ணாடியில் பார்ப்பது போலாகும். அதில் தெரியும் உருவத்தால் நீங்கள் இருவேறு பட்டவர்களாக ஆக முடியாது. வெளிப்படையில் நீங்கள் இருவராகத் தென்பட்டாலும் நீங்கள் ஒருவரே. அது அசலுக்கும் நிழலுக்கும் இடைப்பட்ட வேறுபாடு மட்டுமேயாகும்.

ஆகவே வாக்களிக்கப்பட்ட மஸீஹிலும் இவ்வாறே இறைவன் இவ்வாறே விரும்பினான். வாக்களிக்கப்பட்ட மஸீஹ் எனது கல்லறையில் (கபரில்) அடக்கம் செய்யப்படுவார் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதன் இரகசியம் இதுவேயாகும். அதாவது, அது நானாகவே இருக்கிறேன். மேலும் இதில் இரு உருவ வேறுபாடுகள் உண்டாவதில்லை.

ஈசப்னு மர்யம் (மர்யமின் மகனாகிய ஈஸா) மரணமடைந்து விட்டார் என்பதையும் அவரது கல்லறை காஷ்மீர் ஸ்ரீநகர் கான்யார் வீதியில் இருப்பதையும் உறுதியுடன் அறிந்து கொள்ளுங்கள். இறைவன் தனது புனித வேதத்தில் அவர் மரணித்துப் போனதாக அறிவித்துள்ளான். இந்த வசனத்திற்கு வேறு பொருள் இருக்குமென்றால் ஈஸப்னு மர்யமின் மரணத்தைப் பற்றிய செய்தி திருக்குர்ஆனில் வேறு எங்குள்ளது?

நமது எதிரிகள் கருதுவதைப் போல் மரணத்தைப் பற்றி வந்துள்ள வசனங்களுக்கு வேறு பொருள் இருக்குமென்றால் அவர் ஏதாவது ஒரு நேரத்தில் மரணமடைவார் என்றும் கூட திருக்குர்ஆன் அவரது மரணத்தைப் பற்றி எங்கும் கூறவில்லை என்றாகிவிடும். நமது நபி (ஸல்) அவர்களது மரணத்தைப் பற்றி தெரிவித்த இறைவன் ஈஸாவின் மரணத்தைப் பற்றி முழுக் குர்ஆனிலும் கூறாததன் இரகசிமென்ன?

فَلَمَّا تَوَفَّيْتَنِيْ كُنْتَ اَنْتَ الرَّقِيْبَ عَلَيْهِمْ (5:118)☆ என்னும் இந்த வசனத்தில் ஈஸாவின் மரணத்தைப் பற்றி செய்தி காணப்படுகிறது என்று நீங்கள் கூறுவீர்களென்றால், கிறித்தவர்கள் வழிகெட்டுப் போகும் முன்பே அவர் இறந்து போவார் என்பதை இந்த வசனம் தெளிவாக நிரூபிக்கின்றது.


(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)


## காதியானில் 124 –வது ஆண்டு மாநாடு

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் காதியானில் நடைபெறும் 124 –வது ஆண்டு மாநாடு 2018 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 28, 29, 30 (வெள்ளி, சனி, ஞாயிறு) ஆகிய தேதிகளில் நடத்துவதற்கான அனுமதியை வழங்கியுள்ளார்கள். ஜமாஅத் சகோதரர்கள் இப்போதிருந்தே துஆக்களுடன் இந்த அருளுக்குரிய ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்வதற்காக நிய்யத் வைத்து மாநாட்டில் கலந்து கொள்வதற்கு ஆயத்தம் ஆகுங்கள். அல்லாஹ் நம் அனைவருக்கும் இந்த ஆன்மீக மாநாட்டில் கலந்து கொண்டு அதன் அருள்களிலிருந்து பலன் பெறுவதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக! இந்த ஆண்டு மாநாடு எல்லா வகையிலும் வெற்றி பெறுவதற்கும், அருளுக்குரியதாக இருப்பதற்கும், நல்ல ஆன்மாக்கள் நேர்வழி பெறுவதற்கு காரணமாக அமைவதற்கும் துஆக்கள் செய்து வாருங்கள். ஜஸாகுமுல்லாஹ் அஹ்ஸனல் ஜஸா.

(நாஸிர் இஸ்லாஹ்–வ–இர்ஷாத் மர்கஸிய்யா காதியான்)


பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.

Proprieter Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**அஹ்மதிகள் மீது மிகப்பெரிய பொறுப்பு இருக்கின்றது. அவர்கள் நோன்பின் உண்மைத்துவத்தை புரிய வேண்டும். மேலும் அதன் நோக்கங்களை அடைவதற்கு முயற்சி செய்ய வேண்டும். இது ரமலான் மாதத்தின் நோக்கமாக இருக்கின்றது**

**ரமலானில் நாம் இறையச்சத்தை அடைய முயற்சி செய்கின்றோம். அல்லது முயற்சி செய்பவராக விளங்கினால் நமக்கு நமது இறை வணக்கத்தின் பக்கமும் கவனம் ஏற்படும். நாம் இறையச்சத்தை மேற்கொண்டவாறு நோன்பு நோற்றால் தீமைகளிலிருந்து தப்பிப்பதற்கும் கவனம் ஏற்படும். அல்லாஹ்வின் கட்டளைகளை தேடி அதனை அமல் செய்வதன் பக்கம் கவனம் ஏற்படும்**

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மேற்கோள்களின் ஒளியில் இறையச்சத்தின் முக்கியத்துவம், அதன் எதிர்பார்ப்பு மேலும் அதன் அருள்கள் தொடர்பான நற்குறிப்புகள்**

**பாகிஸ்தானில் ஜமாஅத்திற்கு நல்ல நிலைமைகள் ஏற்படவும், பொதுவாக மற்ற முஸ்லிம்களுக்காகவும் குறிப்பாக முழு உலகத்திற்காகவும் துஆ செய்வதன் பக்கம் ஹுஸூர் அவர்கள் கவனமூட்டினார்கள்**

**அல்லாஹ் முஸ்லிம்கள் மீது கருணை காட்டுவானாக. அவர்களுடைய தலைவர்களுக்கும், உலமாவிற்கும் காலத்தின் இமாமை அடையாளங்கண்டு கொள்வதற்கான அறிவை அல்லாஹ் அவர்களுக்கு வழங்குவானாக**

சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்
(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்**
**18 மே 2018** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1397 -ஆம் ஆண்டு **ஹிஜ்ரத்** மாதம் **18 -ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ
وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ -
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ - الرَّحْمٰنِ الرَّحِيْمِ -
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ - إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ -
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ - صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ
يٰٓأَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا كُتِبَ عَلَيْكُمُ الصِّيَامُ كَمَا
كُتِبَ عَلَى الَّذِيْنَ مِنْ قَبْلِكُمْ لَعَلَّكُمْ تَتَّقُوْنَ

நம்பிக்கை கொண்டவர்களே! உங்களுக்கு முன் இருந்த மக்கள் மீது நோன்பு கடமையாக்கப்பட்டதைப் போன்று நீங்கள் இறையச்சத்தை மேற்கொள்வதற்காக உங்கள் மீதும் நோன்பு கடமையாக்கப்பட்டுள்ளது. (2:184)

அல்லாஹ்வின் அருளால் நமக்கு இன்னொரு ரமலானை கடக்கும் வாய்ப்பு கிடைத்து வருகிறது. நேற்றிலிருந்து ஆரம்பமாகி விட்டது. இந்த மாதத்தில் முஸ்லிம்களில் பெரும்பாலார் நோன்புடன் பள்ளிவாயிலில் ஐவேளை தொழுகை மற்றும் தராவீஹ் தொழுகைக்கு வருகின்றனர். இதன் பக்கம் கவனம் ஏற்படுகிறது. நமது பள்ளிவாயில்களில் கூட மற்ற நாட்களை விட அதிகமாக மக்கள் வருகின்றனர். நான் ஓதிய வசனம் இன்றைய நாட்களில் MTA விலும் நினைவூட்டுவதற்காக அதிகமாக ஓதப்படுகிறது. அதாவது இந்த நோன்பு கடமையாக்கப்பட்டுள்ளதன் நோக்கம் இறையச்சம் பெறுவதாகும்.

முந்தைய மார்க்கங்களிலும் நோன்பு கடமையாக்கப்பட்டிருந்தது. அதன் நோக்கமும் இறையச்சம் பெறுவதே ஆகும். தற்போது அம்மார்க்கங்களை ஏற்றுக் கொண்டவர்களிடம் அந்த போதனைகள் அசல் வடிவத்திலும் இல்லை; செயலளவிலும் இல்லை. அவர்களிடம் இறையச்சமும் இல்லை. ஆனால், இஸ்லாம் ஒரு நிரந்தரமான மார்க்கமாகும். மறுமை வரை நிலைநிற்கக்கூடிய மார்க்கம் ஆகும். அதன் போதனை நிரந்தரமானதாகும்.

மேலும் இன்று திருக்குர்ஆன் உலகம் முழுவதும் அதன் அசல் வடிவத்தில் பாதுகாப்பாக இருக்கின்றது. மேலும் இறையச்சத்தில் நிலைத்திருப்பவர்களுக்கு அது நேர்வழிகாட்டக் கூடியதாக விளங்குகின்றது.

இந்த போதனைகளின்படி அமல் செய்யக் கூடியவர்கள் எப்போதும் இறையச்சத்தின்படி நடக்கக்கூடியவர்களாக இருப்பார்கள். பிறகு இறுதி காலத்தில் நம்முடைய சீர்திருத்தம், திருக்குர்ஆனை அச்சிட்டு வெளியிடுதல் மற்றும் அதன்படி செயலாற்றுவதற்காக கவனமூட்டுதல் மற்றும் நேர்வழியை காட்டுவதற்காக அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை அனுப்பினான். மேலும் நமக்கு அன்னாரை ஏற்றுக் கொள்வதற்கான நற்பாக்கியத்தை வழங்கினான். எனவே அஹ்மதிகள் மீது மிகப்பெரும் பொறுப்பு இருக்கின்றது. அதாவது அவர்கள் நோன்பின் உண்மைத்துவத்தை புரிய வேண்டும். மேலும் அதன் நோக்கங்களை அடைவதற்கு முயற்சி செய்ய வேண்டும். அதாவது இறையச்சத்தை உருவாக்குவது, இறையச்சத்தில் முன்னேற்றம் அடைவது ஆகும்.

இந்த வசனத்திற்கு பிறகுள்ள வசனங்களில் நோன்பு தொடர்பான கட்டளைகள் விரிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது. திருக்குர்ஆனை ஓதுவது, அதன் கட்டளைகளை ஏற்றுக் கொள்வது மேலும் துஆவின் பக்கம் கவனம் செலுத்துவது தொடர்பாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது. ஆனால் இவை எல்லாவற்றிற்குமுரிய சுருக்கம் இவ்வசனத்தில் ஒரே சொல்லில், அதாவது நோன்பின் நோக்கம்க இறையச்சத்தை மேற்கொள்வது என்று எடுத்துக் கூறியுள்ளான். ஆக இந்த மாதத்தில் அல்லாஹ்வின் கட்டளைகளின்படி அமல் செய்வது மற்றும் இறைவணக்கத்தின் பக்கம் கவனம் செலுத்தி குறிப்பான முறையில் முயற்சி செய்யுங்கள். அதன் மூலமாக அதன்படி எப்போதும் அமல் செய்து உங்களது வாழ்க்கையில் இதனை ஓர் அங்கமாக ஆக்கக்கூடியதாக ஆக்க வேண்டும்.

ஆகவே, ரமலானில் நாம் தக்வாவைப் பெறுவதற்காக முயற்சி செய்கிறோம். அல்லது முயற்சி செய்பவர்களாக இருக்கிறோம் எனில், நமது இறை வணக்கத்தில் கவனம் ஏற்படும். நாம் தக்வாவின்படி நடக்க முயற்சி செய்தவாறு நோன்பு வைப்போம் எனில், பாவத்திலிருந்து தப்புவதன் பக்கம் கவனம் ஏற்படும். அல்லாஹ்வின் கட்டளைகளைத் தேடி அதன்படி அமல் செய்வதன் பக்கம் கவனம் பிறக்கும்.

நாம் தீமைகளிலிருந்து தப்பிக்கவில்லை எனில், அந்த தீமைகள் நமது இருப்பின் மீது தாக்கம் ஏற்படுத்துகின்றன அல்லது மற்றவர் மீது தாக்கம் ஏற்படுத்துகின்றது எனில் அதனை விடுவதன் மூலமே நோன்பின் நோக்கம் நிறைவேறும். நாம் அவற்றை விடவில்லை எனில் நோன்பின் நோக்கம் நிறைவேறாது. இதுவே தக்வாவாகும்.

நோன்பு வைத்திருந்தும்கூட நம்மிடம் தற்பெருமை இருக்கும் எனில், நமது பணிகளில், நாம் கூறும் விஷயங்களில் நமக்கு அதிகமான பெருமை இருக்கும் எனில், சுயநலம் பேணும் பழக்கம் இருக்கும் எனில், மக்களால் பாராட்டப்பட வேண்டும் என்ற விருப்பம் இருக்கும் எனில், தமக்கு கீழுள்ளவர்கள் நம்மை வரவேற்க வேண்டும் என்று ஆசைப்பட்டால், எவராவது பாராட்டி அதனால் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தால் அல்லது அதற்காக விரும்பினால் அது இறையச்சம் கிடையாது. நோன்பில் சண்டை, சச்சரவு, பொய், குழப்பம் விளைவித்தல்களிலிருந்து தப்பிக்கவில்லை எனில் இது தக்வா இல்லை. நோன்பில் இறை வணக்கத்திலும், துஆவிலும், நல்ல பணிகளிலும் நேரத்தை செலவழிக்கவில்லை எனில் இது தக்வா கிடையாது. மேலும் நோன்பின் நோக்கத்தை நாம் நிறைவேற்றவில்லை. ஆகவே, ரமாலானில் தீமைகளை விட்டு விடுவது, நன்மைகளை மேற்கொள்வதன் மூலம்தான் நோன்பின் நோக்கம் நிறைவேறும். மனிதன் இதில் உறுதியாக நிற்க முயற்சி செய்தால் பிறகு, தான் உண்மையில் நோன்பின் நோக்கத்தை நிறைவேற்றியவர் ஆவார். அது அல்லாமல் வெறும் பட்டினி கிடப்பதனால் நோன்பின் நோக்கத்தை பெற இயலாது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) கூறினார்கள்: நீங்கள் வெறுமனே பட்டினி கிடப்பதில் அல்லாஹ்வுக்கு எந்த தேவையும் இல்லை. (புகாரி)

சிலர் நோன்பின் பெயரில் ஏமாற்றுகின்றனர். மேலும் பசியுடன் கூட இருப்பதில்லை. தாம் நோன்பு வைத்துள்ளதாக அவர்கள் வெளிப்படையாக காட்டிக் கொள்கின்றனர். ஆனால் நோன்பு வைப்பதில்லை. அவர்கள் தமது உணவு, பானத்தில் இருந்தும் கூட விலகி இருக்கவில்லை. இவர்கள் அல்லாஹ்விற்காக சில மணி நேரங்கள் கூட உணவு உண்பதிலிருந்தும், பருகுவதிலிருந்து தம்மைத்தாமே தடுத்து வைக்க இயலாதவர்களாவர். இப்படிப்பட்ட மக்கள் மற்ற விவகாரங்களில் தமது நஃப்ஸை எவ்வாறு அடக்கி வைப்பார்கள்?

நேற்று நடந்து ஒரு விஷயம். இங்கு முஸ்லிம்களின் நோன்புகள் குறித்து பத்திரிகையில் ஓர் ஆய்வு வெளிவந்துள்ளது. அதில், இங்குள்ள பெரும்பாலான இளைஞர்கள் காட்டுவதற்காக நோன்பு வைக்கின்றனர். அவர்களுக்கு நோன்பின் நோக்கம் குறித்து எதுவும் தெரியவில்லை என்று கூறப்பட்டுள்ளது.

ஒரு கிறித்தவர் அல்லது மார்க்கத்தைச் சாராத ஒருவர் ஒரு முஸ்லிம் இளைஞரிடம் நேர்காணல் எடுத்தார். அந்த இளைஞர் கூறுகிறார்: நான் காலையில் குடும்பத்தினருடன் சேர்ந்து சஹரி செய்து நோன்பு வைத்தேன். மிகவும் முறையாக எங்களது வீட்டில் சஹரி மற்றும் இஃப்தாரிக்கான ஏற்பாடு செய்யப்படுகிறது. எனது தாயாருக்கு 64 வயது. சர்க்கரை நோயாளியாக இருந்தும் கூட பேணுதலுடன் நோன்பு வைக்கிறார். அவ்வாறிருந்தும் மிகவும் கவனமாக எங்களுக்காக நோன்பு திறப்பதற்காக விதவிதமாக உணவுகளை தயார் செய்கிறார். இப்போது வீட்டிற்கு சென்று இஃப்தார் உண்போம். ஆனால் அந்த இளைஞர் கூறுகிறார். உண்மை என்னவென்றால், சமுதாயத்தின் அழுத்தம் அல்லது வீட்டிலுள்ளவர்களுக்கு காட்டுவதற்காக நான் வெளிப்படையாக நோன்பு வைத்திருப்பதாக காட்டுகின்றேன். நான் இன்று காலையில் சஹர் உண்டேன். ஆனால் மதியமும் நான் மீன் மற்றும் சிஃப்ஸ் சாப்பிட்டு வந்துள்ளேன்.

அவர் கூறுகிறார்: இங்கு இங்கிலாந்தில் என்னைப் போன்ற ஆயிரக்கணக்கான இளைஞர்கள் இவ்வாறே நோன்பு நோற்கின்றனர்.

ஆக இதுவே சிலரின் நோன்பின் உண்மைத்துவம் ஆகும். இன்னும் சிலர் நாள் முழுவதும் பட்டினியாக இருந்தாலும் தொழுகை மற்றும் இறை வணக்கங்களில் இருக்க வேண்டிய அளவுக்கு கவனம் இருப்பதில்லை. ஓரிரு தொழுகையை தொழுது விடுகின்றனர். அவ்வளவுதான்.

அல்லாஹ்வின் ஏவல் விலக்கல் கட்டளைகள் குறித்து எந்த கவனமும் இருப்பதில்லை. இப்படிப்பட்ட நோன்புகள் அல்லாஹ் கூறிய நோக்கத்தை அதாவது இறையச்சத்தை உருவாக்குவது என்ற நோக்கத்தை அது நிறைவேற்றுவதில்லை.

ஆகவே, அஹ்மதிகளுக்கு பெரும் பொறுப்பு உள்ளது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொண்ட பிறகு அல்லாஹ் எவ்வாறு நோன்பின் கடமைகளை நிறைவேற்றுமாறு கட்டளையிட்டானோ அவ்வாறு அதன் கடமைகளை நாம் நிறைவேற்ற முயற்சி செய்ய வேண்டும். தக்வா என்றால் என்ன? மேலும் அதனை நாம் எவ்வாறு பெற வேண்டும்? என்பதை புரிய முயற்சி செய்ய வேண்டும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் தக்வா சம்பந்தமாக அதாவது இறையச்சமுடையவர் யார்? என்பதை கூறியுள்ளார்கள். உண்மையான நிம்மதியும் ரசனையும் தக்வாவின் மூலமே பிறக்கிறது. உலக இன்பத்தினாலோ, ரசனையினாலோ அது கிடைப்பதில்லை. எவ்வாறு நாம் நன்மைகளை செய்ய வேண்டும்? மனிதன் உண்மையான நம்பிக்கையாளர் ஆவதற்கு தமது ஒவ்வொரு பணியையும் இறைவனது விருப்பத்திற்கேற்பவும், அவனது திருப்தியைப் பெறுவதற்காகவும் செய்ய வேண்டும். இந்த ஒரு விஷயமே நம்பிக்கையாளரையும், நிராகரிப்பவரையும் வித்தியாசப்படுத்திக் காட்டுகிறது.

மேலும் இதையும் அன்னார் நமக்கு கூறியுள்ளார்கள். அதாவது மனிதன் இறை ஞானத்தில் முன்னேற்றம் அடைய வேண்டும். வரக்கூடிய ஒவ்வொரு நாளும் நம்மை இறை ஞானத்தில் முன்னால் கொண்டு செல்லக்கூடிய நாளாக இருக்க வேண்டுமேயொழிய அதே இடத்தில் நின்றுவிடக் கூடாது.

சமுதாயத்தின் அழுத்தம் மற்றும் பிறருக்கு காட்டுவதற்காக நான் உதாரணமாக எடுத்துக்கூறிய அந்த மக்களைப் போன்று நாம் நோன்பு வைப்பவர்களாக இருக்கக் கூடாது. மாறாக, இறையச்சத்தில் முன்னேறுவதற்காக நோன்பு நோற்க வேண்டும். எவ்வாறிருப்பினும் நான் தக்வா தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய பல்வேறு மேற்கோள்களைக் கூறுவேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இறைவனின் திருப்தியைப் பெறுவதற்காக தக்வாவில் செல்வதற்கு போதனை செய்தவாறு தனது ஓர் இல்ஹாமை குறிப்பிட்டவாறு கூறுகிறார்கள்.

முந்தைய எல்லா பரிசுத்தமான இறை வேதங்களின் சுருக்கம் இறையச்சமே ஆகும்.

அன்னார் கூறுகின்றார்கள்: நேற்று (அதாவது 22 ஜுன் 1899) ஆண்டு மாநாடு தொடர்பாக கூறுகின்றார்கள். அன்று எனக்கு அல்லாஹ்விடமிருந்து பலமுறை இந்த இல்ஹாம் வந்தது. அதாவது நீங்கள் இறையச்சமுடையவராக ஆவீர்கள் என்றால் மேலும் தக்வாவின் நுட்பமான வழிகளில் செல்விர்கள் என்றால் அல்லாஹ் உங்களுடன் இருப்பான்.

அன்னார் கூறுகிறார்கள்: நம்முடைய ஜமாஅத் உண்மையான இறையச்சம் மற்றும் தூய்மையைப் பெற வேண்டும் என்பதற்காக நான் என்ன செய்வேன்? என்ற வேதனை என் உள்ளத்தில் ஏற்படுகின்றது.

மேலும் கூறுகிறார்கள்: நான் எந்த அளவிற்கு துஆ செய்கிறேன் என்றால் துஆ செய்து செய்து மிகவும் சோர்வு என்னை ஆட்கொண்டு விடுகின்றது. மேலும் சில நேரங்களில் இதனால் மயக்கமும் அழிவும் வந்து விடும் அளவிற்கு நிலைமை ஆகி விடுகிறது.

கூறினார்கள்: எப்போது வரை ஒரு ஜமாஅத் இறைவனின் பார்வையில் இறையச்சமுள்ளதாக ஆகாவில்லையோ அப்போது வரை இறைவனின் உதவிகள் அவர்களுடன் இருப்பதில்லை.

அன்னார் கூறுகிறார்கள்: தக்வா என்பது முந்தைய எல்லா பரிசுத்தமான வேதம் மற்றும் தவ்ராத் மற்றும் இஞ்ஜீலின் போதனைகளின் சுருக்கம் ஆகும். ஆகும். திருக்குர்ஆன் தக்வா என்ற ஒரே சொல்லின் மூலம் அல்லாஹ்வின் முழுமையான மகத்தான விருப்பத்தை தெரிவித்து விட்டது.

அன்னார் கூறுகிறார்கள்: நான் இந்த கவலையிலும் இருக்கின்றேன். அதாவது நமது ஜமாஅத்திலுள்ள உண்மையான இறையச்சம் உடையவர்களையும், உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை தருபவர்களையும் மேலும் அல்லாஹ்வை விட்டு விட்டவர்களையும் பிரித்துக் காட்ட வேண்டும். பிறகு உலகின் கவலையில் பீடிக்கப்பட்டிருப்பவர், இரவும் பகலும் செத்துப்போன உலகிற்காக வாழ்க்கையை கழிக்க நினைப்பவர்களை நான் சிறிதும் பொருட்படுத்த மாட்டேன்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 303 – 1985 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

எனது ஜமாஅத்தைச் சேர்ந்த ஒவ்வொருவரும் இறையச்சத்தின்படி நடக்கக் கூடியவர்களாக இருக்க வேண்டும். உலகியல் கவலைகள் அவர்களை தின்று விடக் கூடாது என்பதே அன்னாரது வேதனையாக இருந்தது. பிறகு இறையச்சத்தின்படி நடப்பதே ஷரீஅத்தின் சாராம்சமாகும். மேலும் துஆ ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்று விரும்பினால் இறையச்சத்தின்படி செயல்படுங்கள் என்பதன் பக்கம் கவனமூட்டியவாறு அன்னார் கூறுகின்றார்கள்:

நீங்கள் தக்வாவின் வழியை மேற்கொள்ளுங்கள். ஏனெனில், தக்வா எத்தகைய விஷயம் எனில் அதனை ஷரீஅத்தின் சுருக்கம் என்று கூறலாம்.

தொடர்ந்து அஹ்மதிகளை நோக்கி அன்னார் கூறுகிறார்கள்: ஷரீஅத்தை சுருக்கமாக கூறுவதாயின், ஷரீஅத்தின் சத்து தக்வாவே ஆகும். தக்வாவின் படித்தரங்கள் நிறைய உள்ளன. ஆனால் உண்மையின் தேட்டத்துடன் ஆரம்ப படித்தரங்களை உறுதியுடனும், கலப்பற்ற முறையிலும் நிறைவேற்றினால், அந்த நன்னம்பிக்கை மற்றும் கலப்பற்ற தன்மையின் காரணமாக உயர் தரத்தை பெற்று விடுவார். ஆகவே நிரந்தர மனப்பான்மையுடன் சிறிய நன்மைகளாயினும், பெரிய எல்லா நன்மைகளிலும் அதன் பக்கம் கவனம் செலுத்துவது அவசியமாகும்.

அவர்கள் கூறுகிறார்கள்: அல்லாஹ் கூறுகிறான். إِنَّمَا يَتَقَبَّلُ اللَّهُ مِنَ الْمُتَّقِينَ

அதாவது அல்லாஹ் இறையச்சமுடையவரின் துஆவை ஏற்றுக் கொள்கிறான் (5:28). இது அல்லாஹ்வின் வாக்குறுதியாகும். (அவன் வாக்குறுதியை மீறுவதில்லை).

إِنَّ اللَّهَ لَا يُخْلِفُ الْمِيعَادَ (3:10) என்று அவன் கூறியது போன்று அல்லாஹ்வின் வாக்குறுதியில் மாறுபாடு இருக்காது.

ஆகவே, துஆ ஒப்புக் கொள்ளப்படுபவதற்கு தக்வா ஓர் அடிப்படையான நிபந்தனையாகும். அதனை மாற்ற முடியாது. ஆக துஆ ஒப்புக் கொள்ளப்பட தக்வா எந்நிலையிலும் மிக மிக அவசியமானதாகும்.

அவர்கள் கூறுகிறார்கள்: ஒரு மனிதன் கவனமற்றவனாகவும் வழி தவறியவனாகவும் இருந்து கொண்டு துஆ ஒப்புக் கொள்ளப்பட வேண்டும் என்று விரும்பினால் அவன் ஒரு முட்டாளும் அறிவற்றவனும் அல்லவா? எனவே, நமது ஜமாஅத்திம் மீது கடமையாகும். அதாவது அவர்களில் ஒவ்வொருவரும் தங்களால் இயன்றவரை தக்வாவின் வழியில் அடியெடுத்து வைக்க வேண்டும். அதன் மூலம் துஆ கண்டிப்பாக ஒப்புக் கொள்ளப்படும். மேலும் ஈமான் அதிகமாகவும் செய்யும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 108–109. 1985 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

ஆகவே, ரமலானில் இருந்து பலன் பெற இது அடிப்படை மருந்து ஆகும். அதாவது நமது நோன்பு மற்றும் நமது ஒவ்வொரு செயலும் தக்வாவைப் பெறுவதற்காகவே இருக்க வேண்டும். நாங்கள் நிறைய துஆ செய்தோம். ஏற்றுக் கொள்ளப்படவே இல்லை என்று அதிகமான மக்கள் கூறுகின்றனர். அவர்கள் தமக்குள் மார்க்கம் மிகைத்துள்ளதா? தக்வாவின் படி நாம் செயல்படுகின்றோமா? அல்லது உலகியல் கலப்பு அதிகமாக உள்ளதா? என தம்மைத் தாமே ஆய்வு செய்ய வேண்டும். ஆக, துஆ ஒப்புக் கொள்ளப்படுவதற்கு இதுவும் ஒரு நிபந்தனையாகும்.

பிறகு அன்னார் கூறுகிறார்கள்: உள்ளபடியே இறையச்சம் உள்ளவர்களுக்கு பெரும் பெரும் வாக்குறுதிகள் உள்ளன. அல்லாஹ் இறையச்சமுடையவர்களின் வலியாக இருக்கிறான் என்பதைன விட அதிகமாக வேறு என்ன வேண்டும்? இறைவனிடம் நாங்கள் நெருக்கத்தைப் பெற்றுள்ளோம் என்று கூறக்கூடிய ஒருவரிடம் தக்வா இல்லையெனில் அவர் பொய்யர் ஆவார். இன்னும் சொல்வதாயின், அவர் குழப்பம் நிறைந்த வாழ்வை கழிப்பவர் ஆவார். (இந்த பெயர்தாங்கிய பெரியவர்கள்) அநீதி இழைக்கின்றார்கள். அவர்கள் பிறப்பு மற்றும் இறை நெருக்கத்தை பெறக்கூடிய அந்தஸ்து ஆகியவை எங்கள் மூலமாகவே பெற முடியும் என்று கூறுகின்றனர். ஏனென்றால் அல்லாஹ் இதனோடு இறையச்சமுடையவராக இருக்க வேண்டும் என்ற நிபந்தனையை வைத்துள்ளான்.

கூறினார்கள்: மேலும் ஒரு நிபந்தனையை கூறியுள்ளான். அல்லது இவ்வாறும் கூறலாம். அதாவது இறையச்சமுடையவர்களது அடையாளமாக

அல்லாஹ் اِنَّ اللّٰهَ مَعَ الَّذِيْنَ اتَّقَوْا என்று கூறுகின்றான். இறைவன் அவர்களோடு இருக்கின்றான். அதாவது இறையச்சமுடையோருக்கு உதவுகின்றான். அல்லாஹ் உதவுகின்றான் என்பதற்கான ஆதாரம் அவனது உதவிகள் மூலமாகவே தெரிய வருகின்றது. (அல்லாஹ் உதவி செய்கின்றான் என்றால் நிச்சயமாக அவன் நம்முடன் இருக்கின்றான் என்று புரிந்து கொள்ளுங்கள்)

அதனை அழிப்பதற்கான வழி தக்வாவை மேற்கொள்வதாகும். தக்வாவின் மூலமே அந்த வாழ்வை கழித்து நல் விளைவைப் பெற முடியும்.

அன்னார் கூறுகின்றார்கள்: நினைவில் கொள்ளுங்கள். இறைவனது உதவி ஒருபோதும் தூய்மையற்றவர்களுக்கும், குழப்பவாதிகளுக்கும் கிடைக்க இயலாது. அதனை அடைவதற்கான வழி இறையச்சமேயாகும். இறைவனது உதவிகள் இறையச்சமுடையவருக்கே உரியதாகும்.

அவர்கள் கூறுகிறார்கள்: பொருளாதார நெருக்கடி மற்றும் மற்ற நெருக்கடியில் இருந்து விடுபடும் வழி தக்வாவே ஆகும். அல்லாஹ் கூறுகிறான். مَنْ يَّتَّقِ اللّٰهَ يَجْعَلْ لَّهٗ مَخْرَجًا وَّيَرْزُقْهُ مِنْ حَيْثُ لَا يَحْتَسِبُ

அதாவது அல்லாஹ் இறையச்சம் உள்ளவருக்கு எல்லா பிரச்சனைகளிலிருந்தும் வெளியேற்றத்தை வழங்குகிறான். அவருக்கு மறைவில் இருந்து மாசற்ற வாழ்விற்கான வழியை ஏற்பாடு செய்து தருகிறான். அவருக்கு தெரியாத இடத்திலிருந்து அவருக்கு வாழ்வாதாரத்தை வழங்குகிறான்.

ஆகவே, இந்த துஆவையும் செய்ய வேண்டும். مَنْ يَّتَّقِ اللّٰهَ يَجْعَلْ لَّهٗ مَخْرَجًا وَّيَرْزُقْهُ مِنْ حَيْثُ لَا يَحْتَسِبُ (அத்தலாக்:3,4) இதனை மனிதன் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். அதனால் தக்வாவின் படி நடப்பதற்கு கவனம் ஏற்படும்.

அவர்கள் கூறுகிறார்கள்: சிந்தித்துப் பாருங்கள். மனிதன் உலகில் விரும்புவது என்ன? மனிதன் உலகில் விரும்பும் மிகப்பெரும் விருப்பம் இதுவே ஆகும். அதாவது, சுகமும் நிம்மதியும் வேண்டும் என்பதேயாகும். அதற்காக அல்லாஹ் ஒரே ஒரு வழியைத்தான் வைத்துள்ளான். அது தக்வாவின் வழி என்று அழைக்கப்படுகிறது. இன்னொரு வார்த்தையில் அதனை திருக்குர்ஆனின் வழி என்று கூறப்படுகிறது. அல்லது அதனை ஸிராத்தல் முஸ்தகீம் என்று கூறலாம். சிலர் நிராகரிப்பவர்களிடம் செல்வமும், பொருள்களும் இருக்கின்றன என்று ஒருவர் கூறலாம். அவர்கள் அதன் மூலம் உல்லாசமாக வாழ்கிறார்களே? என்று கூறலாம்.

அவர்கள் கூறுகிறார்கள்: நான் உண்மையாகவே கூறுகிறேன். அவர்கள் உலகத்தின் பார்வையில் இன்னும் சொல்வதாயின், கீழ்த்தரமான உலகியல்வாதிகள் மற்றும் வெளிப்படையானதை வணங்குபவர்களின் பார்வையில் அது மகிழ்ச்சிக்குரியதாக தென்படுகிறது. ஆனால், உண்மையில் அவர்கள் ஒரு எரிச்சலிலும் வேதனையிலுல் பீடிக்கப்பட்டுள்ளனர். அவர்களின் தோற்றத்தை நீங்கள் பார்க்கிறீர்கள். நான் அத்தகையோரின் உள்ளத்தை பார்க்கிறேன். அவர்கள் ஒரு நெருப்பில் எரிந்து கொண்டிருக்கிறார்கள். சங்கிளியால் பிணைக்கப்பட்டிருக்கின்றார்கள்.

அல்லாஹ் اِنَّاۤ اَعْتَدْنَا لِلْكٰفِرِيْنَ سَلٰسِلَا۟ وَاَغْلٰلًا وَّسَعِيْرًا என்று கூறுவது போன்று நிச்சயமாக நாம் நிராகரிப்பவர்களுக்கு (இரும்புச்) சங்கிலிகளையும், கழுத்து விலங்குகளையும், சுடர்விட்டெரியும் நெருப்பையும் ஆயத்தப்படுத்தி வைத்துள்ளோம். (76:5)

அன்னார் கூறுகின்றார்கள்: அவர்கள் நன்மையின் பக்கம் வரவே முடியாது. அவர்களது கழுத்திலுள்ள சங்கிலிகளில் எத்தகைய அழுத்தம் ஏற்படுகின்றது எனில் அவர்கள் விலங்குகளை விட மோசமானவர்களாக ஆகிவிடுகின்றனர். அவர்களின் கண்கள் எப்போதும் உலகின் பக்கமே குனிந்துள்ளது. பூமியின் பக்கம் குனிந்து கொண்டே செல்கின்றனர். உள்ளுக்குள்ளேயே ஒரு சூடும் எரிச்சலும் அவர்களை எரித்துக் கொண்டிருக்கிறது. அவர்களின் செல்வத்தில் குறைவு ஏற்பட்டால் அல்லது அவர்களது திட்டங்களில் வெற்றி ஏற்படவில்லையென்றால் அவர்கள் அதில் மேலும் எரிகிறார்கள்.

எந்த அளவுக்கு எனில் அதனால் அவர்கள் சில நேரங்களில் பைத்தியமாகி விடுகிறார்கள். அல்லது நீதிமன்றங்களுக்கு செல்லத் தொடங்குகின்றனர்.

அன்னார் கூறுகின்றார்கள்: உள்ளபடி ஒரு மார்க்கமற்ற மனிதன் ஒரு நெருப்பை விட குறைந்தவன் அல்லன். (அவன் தனது நெருப்பினால் எரிந்து கொண்டு இருக்கிறான். இவ்வாறான பல காட்சிகளை நாம் பார்க்கின்றோம். செய்தித்தாள்களில் கூட இப்படிப்பட்ட செய்திகளை படிக்கின்றோம். அவர்களுக்கு நிம்மதியும் நிலைப்பாடும் கிடைப்பதில்லை. அது ஆறுதலான மகிழ்ச்சியான வாழ்வின் மூலமே கிடைக்க முடியும்.)

அன்னார் கூறினார்கள்: எனவே அவருக்கு நிம்மதியும், மனதிருப்தியும் கிடைப்பதில்லை. எவ்வாறு ஒரு குடிகாரர் மது அருந்தி விட்டு மீண்டும் கேட்கிறார்; கேட்டுக் கொண்டே செல்கிறார். அவரிடம் ஒரு சூடு காணப்படுகிறது. அதேபோன்று ஓர் உலகியல்வாதியும் ஒரு நெருப்பில் இருக்கிறார். (எரிந்து கொண்டிருக்கின்றார்). அவரது ஆசைகளின் நெருப்பு ஒரு வினாடி கூட அணைவதில்லை. உண்மையான மகிழ்ச்சி உண்மையில் ஓர் இறையச்சமுள்ளவருக்குதான் கிடைக்கிறது. அவருக்காக இரண்டு ஜன்னத் இருப்பதாக அல்லாஹ் வாக்குறுதி அளித்துள்ளான்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 420–421. 1985 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

உண்மையான இன்பமும் ரசனையும் தக்வாவைச் சார்ந்தது என்பதை விளக்கியவாறு அன்னார் கூறுகிறார்கள்: ஓர் இறையச்சம் உள்ளவர் உண்மையான மகிழ்ச்சியை ஒரு குடிசையில் கூட பெற முடியும். ஆனால், உல்லாசப் பிரியரான ஒரு உலகியல்வாதிக்கு மகத்தான ஒரு மாளிகையில் கூட அது கிடைக்க முடியாது. (தன்னிறைவும், தக்வாவும், இறைவனது திருப்தியைப் பெற வேண்டும் என்பது நோக்கமாக இருந்தால் பெரிய பெரிய செல்வந்தர்களினால் அதனை பெற முடியாத நிலையிலும் கூட சாதாரண நிலைமைகளில் மனிதன் வாழ்ந்து விடுகின்றான். மேலும் நிம்மதியும், ரசனையும் உருவாகின்றது.

அவர்கள் கூறுகிறார்கள்: எந்த அளவுக்கு அதிகமாக உலகம் கிடைக்கிறதோ அதே அளவுக்கு துன்பமும் தொல்லையும் அதிகம் வருகிறது. எனவே நினைவில் கொள்ளுங்கள். உண்மையான நிம்மதியும் இன்பமும் உலகவாதியின் பங்கில் இல்லை. பொருள் அதிகமாக இருப்பது, நல்ல ஆடை அணிவது அல்லது உணவு மகிழ்ச்சியைத் தரும் என்று எண்ணாதீர்கள்; ஒருபோதும் இல்லை. மாறாக இவை அனைத்தும் தக்வாவில்தான் உள்ளது.

இவை அனைத்திலிருந்தும் தெரிய வருவது என்னவென்றால், உண்மையான தக்வா இல்லாமல் ஒரு நிம்மதியோ மகிழ்ச்சியோ கிடைக்க முடியாது. தக்வாவுக்கு அதிகமான கிளைகள் உள்ளன. அது சிலந்தி வலைகளைப் போன்று பரவியுள்ளன. தக்வா என்பது மனிதனின் அனைத்து உறுப்புகள், நாவு, கொள்கைகள் மற்றும் நல்லொழுக்கங்கள் சம்பந்தப்பட்டதாகும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 421–422. 1985 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

கொள்கைகளிலும், நாவிலும் மற்றும் பொதுவான ஒழுக்கங்களிலும் தக்வா இருக்க வேண்டும்.

நோன்பு சம்பந்தமாக ஒரு ஹதீஸ் உள்ளது. நோன்பாளி தமது நாவை எப்போதும் தூய்மையாக வைக்க வேண்டும். எவராவது அவரிடம் சண்டை சச்சரவு செய்தாலும் கூட நான் நோன்பாளி. உமது இந்த வார்த்தைகளுக்கு என்னால் பதில் தர இயலாது என்று கூற வேண்டும். (புகாரி)

அன்னார் கூறினார்கள்: மிக நுட்பமான பிரச்சனைகள் நாவினால் உருவாகின்றன. சில நேரங்களில் தக்வாவில் இருந்து விலகி ஒரு விஷயத்தைக் கூறுகின்றார். மேலும் மனதளவில் நான் இவ்வாறு கூறி விட்டேன். இவ்வாறு கூறினேன் என்று மகிழ்ச்சி அடைகிறார். ஆனால் அது தீய விஷயமாக இருக்கிறது.

இப்போது எனக்கு ஒரு கதை நினைவுக்கு வருகிறது. ஒரு பெரியவரை ஓர் உலகியல்வாதி விருந்திற்கு அழைத்தார். (இந்த நுட்பத்தையும் பார்க்க வேண்டியுள்ளது. தகாத வார்த்தைகளை கூறுவது, சண்டை சச்சரவு செய்வது மட்டுமின்றி சுயநலம், காட்டுதல் ஆகியவை கூட நாவினால் ஏற்படும் பாவங்களும் தக்வாவின் குறைவும் ஆகும். )

அவர்கள் கூறினார்கள்: ஓர் உலகியல்வாதி ஒரு பெரியவரை விருந்துக்கு அழைத்தார். அந்த பெரியவர் உண்பதற்காக வந்ததும் அந்த தற்பெருமை கொண்ட உலகியல்வாதி தனது பணியாளரிடம், நாம் முதல் ஹஜ் செய்து விட்டு வரும்போது வாங்கி வந்த பாத்திரத்தை கொண்டு வா என்றார். பிறகு இரண்டாவது ஹஜ்ஜில் வாங்கி வந்த பாத்திரத்தை கொண்டு வா என்றார். பிறகு மூன்றாவது ஹஜ்ஜில் வாங்கி வந்த பாத்திரத்தை கொண்டு வா என்றார். அந்த பெரியவர், அந்த உலகியல்வாதியைப் பார்த்து கூறினார்: நீ மிகவும் கருணை காட்டத்தக்கவனாக இருக்கிறாய். உனது மூன்று வார்த்தைகளின் மூலம் நீ உனது மூன்று ஹஜ்ஜையும் நாசமாக்கி விட்டாய். (உலகிற்கு காட்டுவதற்கான ஹஜ் ஆகி விட்டது. அல்லாஹ்வின் திருப்திக்காக செய்யப்பட்டதாக இல்லை) அது தக்வாவை விட்டும் மிகவும் தூர விலகியதாக உள்ளது.

அன்னார் கூறுகிறார்கள்: அந்த பெரியவர் கூறினார். இவ்வாறு கூறுவதில் உனது நோக்கம், நீ மூன்று முறை ஹஜ் செய்வதை எடுத்துக் காட்டுவதாக உள்ளது. எனவே தான் நாவை பேணி வருமாறு இறைவன் கூறுகின்றான். அர்த்தமற்ற, வீணான, சூழ்நிலைக்கேற்ற தேவையில்லாத வார்த்தைகளை கூறுவதிலிருந்து இருந்து விலக வேண்டும். (நாவை பிறருக்கு கஷ்டம் தருவதில் இருந்து விலக்கு வைப்பதற்கு மட்டும் கட்டளையில்லை. மாறாக தமது பெருமையைக் காட்டுவது, காட்டுதல் ஆகியவையும் கூட நன்மையில் இருந்து தூர விலக்குபவையாக உள்ளன. தக்வாவிலிருந்து தூர விலக்கி வைப்பவையாக இருக்கின்றன. இந்த அடிப்படையில் நாம் சிந்திக்க வேண்டும்)

அவர்கள் கூறுகிறார்கள்: பாருங்கள். அல்லாஹ் اِيَّاكَ نَعْبُدُ என்ற போதனையை வழங்கியுள்ளான். மனிதன் தனது ஆற்றலின் மீது மட்டும் நம்பிக்கை வைத்து விடுவது சாத்தியமானவையே. மேலும் இறைவனை விட்டும் தூர விலகிச் சென்று விடுகின்றான். எனவே தான் اِيَّاكَ نَسْتَعِيْنُ என்ற

போதனையையும் வழங்கியுள்ளான். நான் இறை வணக்கம் செய்கிறேன் என்றால் எனக்கு சக்தி மற்றும் ஆற்றலினால் செய்கிறேன் என்று நினைக்காதீர்கள். ஒருபோதும் கிடையாது.

மாறாக, அல்லாஹ்வின் உதவி எப்போது வரை இல்லையோ, மேலும் எப்போது வரை அந்த தூய இருப்பு வாய்ப்பும் ஆற்றலும் வழங்கவில்லையோ ஒன்றும் செய்ய முடியாது. إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِينُ என்று கூறவில்லை. இதில் தனது நஃப்ஸின் முற்படுத்துதலின் வாடை வருகிறது. (அதாவது நான் ஏதோ செய்கிறேன் என்ற எண்ணம் வருகிறது.) அதுவும் தக்வாவுக்கு எதிரானதாகும்.

அவர்கள் கூறுகிறார்கள்: தக்வா மனிதனை முழுமையாக எடுத்துக் கொள்கிறது. நாவினாலேயே மனிதன் தக்வாவில் இருந்து தூரம் சென்று விடுகின்றான். (அதாவது ஒவ்வொரு விவகாரத்திலும் தக்வா அவசியமாகும். நாவினால் மனிதன் தக்வாவில் இருந்து தூரம் சென்று விடுகின்றான்.) மனிதன் நாவினால் தற்பெருமையாக பேசுகிறான். நாவினால்தான் ஃபிர்அவ்னிய பண்பு உருவாகிறது. (பெரும்பாலான மக்கள் நாவினால் மிகப்பெரிய வாதங்களை செய்கிறார்கள்) அதேபோன்று நாவினால்தான் மறைவான செயல்களை பகட்டான காரியங்களாக மனிதன் ஆக்கி விடுகிறான். நாவிலிருந்து வீணான விஷயங்கள் மிக விரைவாக வெளிப்படுகின்றன.

அவர்கள் கூறுகிறார்கள்: ஹதீஸில் வருகிறது. எந்த மனிதன் தொப்புளுக்கு கீழுள்ள உறுப்பு மற்றும் நாவின் தீமைகளிலிருந்து பாதுகாப்பாக இருப்பாரோ அவரது சொர்க்கத்திற்கு நான் பொறுப்பாளியாவேன். விலக்கப்பட்ட பொருள்களை உண்பது, பொய் பேசுவதை விட பெரும் தீமையை ஏற்படுத்தாது. இதனால் விலக்கப்பட்ட பொருள்களை உண்பது நல்லதுதான் என்று எவரும் நினைத்துக் கொள்ள வேண்டாம். (பொய் மற்றும் தவறான விஷயங்களைக் கூறுவது நஷ்டம் விளைவிக்கும் விஷயங்கள் ஆகும்).

அதனால் விலக்கப்பட்டவற்றை உண்பது நல்லது என்று நினைத்து விட வேண்டாம். ஒருவர் அவ்வாறு நினைப்பது முற்றிலும் தவறாகும்.

அன்னார் கூறுகின்றார்கள்: நான் கூற விரும்புவது என்னவென்றால், ஒரு மனிதர் தவிர்க்க முடியாமல் பன்றிக் கறியை சாப்பிட்டு விட்டால் அது வேறு விஷயமாகும். (தவிர்க்க முடியாத சூழ்நிலைகளில் அனுமதி இருக்கின்றது. அதற்கு அல்லாஹ் அனுமதி வழங்கியுள்ளான்.) ஆனால் அவர் நாவினால் பன்றிக் கறி ஆகுமானது என்று ஃபத்வா வழங்கினால் அவர் இஸ்லாத்தை விட்டு தூர விலகி விடுகிறார். (அதாவது அவர் எல்லா நிலைமைகளிலும் பன்றிக் கறி சாப்பிடுவது ஆகுமானது என்று ஃபத்வா வழங்கினால் அவர் இஸ்லாத்தை விட்டு விலகி விட்டார்)

அவர்கள் கூறுகிறார்கள்: இதன் மூலம் அவர் அல்லாஹ் ஹராமாக்கியதை ஹலால் ஆக்குகிறார். இதிலிருந்து தெரிய வருவது என்னவென்றால், நாவினால் ஏற்படும் தீமைகள் அபாயகரமானதாகும். எனவே, இறையச்சமுள்ளவர் தனது நாவை எப்போதும் பாதுகாப்பாக வைக்கிறார். அவரது நாவிலிருந்து தக்வாவுக்கு மாற்றமான எந்தவொரு வார்த்தைகளும் வெளிவருவதில்லை.

அன்னார் கூறுகின்றார்கள்: நீங்கள் உங்கள் நாவின் மீது ஆட்சி செய்யுங்கள். அவ்வாறின்றி நாவு உங்கள் மீது ஆட்சி செய்யக் கூடாது. பிறகு நீங்கள் வீணானவற்றை பேசுவதை விட்டு தடுத்து வையுங்கள்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 421–423. 1985 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

நோன்பில் பெரும்பாலானவர்களின் திக்ரே இலாஹியில் (இறைவனை நினைவு கூர்வதில்) முன்னேற்றம் அடைந்துள்ளனர். முன்னேற்ற மடைந்திருப்பதுடன் அவசியமில்லாத பேச்சுக்களிலிருந்ம் தவிர்ந்திருக்கவும் வேண்டும். மேலும் அதற்காக முயற்சி செய்ய வேண்டும். அதன் மூலம் நோன்பு மற்றும் தக்வாவின் நோக்கம் நிறைவேற வேண்டும்.

பிறகு அன்னார் கூறுகிறார்கள்: நாம் இறையச்சம் மற்றும் தூய்மையில் எந்த அளவு முன்னேறி உள்ளோம் என்பதை எப்போதும் பார்க்க வேண்டும். அதன் அளவுகோல் திருக்குர்ஆன் ஆகும். அல்லாஹ் இறையச்சமுடையவரின் அடையாளங்களுள் ஒன்றாக, அல்லாஹ் இறையச்சமுடையவர்களை வெறுக்கத்தக்க உலக விஷயங்களிலிருந்து வெளியேற்றி அவர்களது பணிகளுக்கு தாமே பொறுப்பேற்றுக் கொள்கின்றான்.

அவன் கூறுகின்றான்:

وَمَنْ يَتَّقِ اللَّهَ يَجْعَلْ لَهُ مَخْرَجًا وَيَرْزُقْهُ مِنْ حَيْثُ لَا يَحْتَسِبُ

அதாவது அல்லாஹ்வுக்கு அஞ்சி நடப்பவருக்கு அவன் ஏதேனும் ஒரு வழியை ஏற்படுத்துவான். அவர் எதிர்பாராத இடத்திலிருந்து அவன் அவருக்கு உணவு அளிப்பான். (65:3,4)

இறையச்சம் உள்ளவருக்கு இதுவும் ஓர் அடையாளமாகும். அல்லாஹ் இறையச்சமுடையவருக்கு அவசியமில்லாத தேவைகளுக்கு அவரை ஆளாக்குவதில்லை. அதாவது அவனே ஏற்பாடு செய்கின்றான். மேலும் தேவையில்லாத அல்லது எவ்வித நோக்கமும் இல்லாத ஆசைகள் அவரது உள்ளத்தில் உருவாவதில்லை. அதன் தேவை உடையவராக அவரை ஆக்குவதில்லை. அதனைப் பற்றிய எண்ணங்கள் கூட வருவதில்லை. இதுவும் தக்வாவின் அடையாளமாகும். இது அல்லாஹ் ஓர் இறையச்சமுள்ளவருடன் நடந்து கொள்ளும் ஒரு நடைமுறையாகும்.

அவர்கள் கூறுகிறார்கள்: ஒரு கடைக்காரர் பொய் சொல்லாமல் தனது பணி நடைபெறாது என்று நினைக்கிறார். எனவே அவர் பொய் சொல்வதிலிருந்து திரும்புவதில்லை. பொய் சொல்வதற்காக அவர் நிர்பந்தத்தை வெளிப்படுத்துகிறார். ஆனால் இதில் ஒருபோதும் உண்மை இல்லை. அல்லாஹ் இறையச்சம் உள்ளவருக்கு தானே பாதுகாவலன் ஆகி விடுகிறான். உண்மைக்கு எதிராக நிர்பந்தப்படுத்துகிற சந்தர்ப்பங்களிலிருந்து அவரை காப்பாற்றி விடுகிறான். அதாவது பொய் சொல்வதற்காக வாய்ப்பு கூட ஏற்படுவதில்லை.

அவர்கள் கூறுகிறார்கள்: எவர் அல்லாஹ்வை விட்டு விட்டாரோ அவரை அல்லாஹ்வும் விட்டு விட்டான். ரஹ்மான் அவரை விட்டு விட்டால் பிறகு ஷய்த்தான் அவருடன் இணைந்து கொள்கிறான்.

அவர்கள் கூறுகிறார்கள்: அல்லாஹ் பலவீனமானவன் என்று நினைக்காதீர்கள். அவன் பெரும் ஆற்றல் பெற்றவன் ஆவான். அவன் மீது ஒரு விஷயத்தில் நம்பிக்கை வைப்பீர்கள் என்றால் அவன் நிச்சயமாக உங்களுக்கு உதவி செய்வான். وَمَنْ يَتَوَكَّلْ عَلَى اللَّهِ فَهُوَ حَسْبُهُ (எவர் அல்லாஹ் மீது தவக்குல் வைப்பாரோ அவருக்கு அவனே போதுமானவாகி விடுகிறான்).

இந்த வசனத்தில் சுட்டிக்காட்டப்பட்டவர்கள் யார் என்றால் அவர்கள் மார்க்கவாதிகள் ஆவர். அவர்களின் எல்லா கவலைகளும் மார்க்கத்திற்காக இருந்தன. உலகயில் காரியங்களை அவர்கள் அல்லாஹ்விடம் பொறுப்பை தந்தவர்களாக இருக்கின்றனர். எனவே அல்லாய் அவர்களுக்கு நான் உங்களுடன் இருக்கிறேன் என்று ஆறுதல் வழங்கினான். சுருக்கமாக, தக்வாவின் அருள்களுள் ஒன்று, அவர்களை அவர்களின் மார்க்க விவகாரங்களிலிருந்து விலக்கி வைக்கிற கஷ்டங்களிலிருந்து அகற்றி விடுகிறான்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 12–13. 1985 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

தக்வா உண்மையாக இருந்தால் உலகியல் பிரச்சனைகளிலிருந்து விலக்கி விடுகிறான். அவர்களின் மார்க்கப் பணிகளில் இடையூறு ஏற்படாமல் இருப்பதற்காக அவ்வாறு செய்கிறான்.

இந்த அடிப்படையில் கூட எவர் நமது உலகியல் பிரச்சனைகள் இவ்வாறு உள்ளன. அதாவது மார்க்கப் பணிகளில் எம்மால் பங்கு பெற முடியாது என்று கூறுவாரோ அவரிடம் சரியான தக்வா இருந்தால் அவர்களின் உலகியல் பணிகளை அவனே தீர்த்து வைத்து விடுகிறான். பிறகு அவர்களுக்கு மார்க்கத் தொண்டாற்றுவதற்கு வாய்ப்பு கிடைத்து விடுகிறது.

ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள், நன்மைக்கு இரு பகுதிகள் உள்ளன. மேலும் நன்மை செய்பவர்களுடன் அல்லாஹ் எவ்வாறு நடந்து கொள்கிறான் என்பதை விளக்கியவாறு கூறுகின்றார்கள்:

மனிதன் எந்த அளவிற்கு நன்மைகளை செய்கிறானோ அது இரு வகைப்படும். ஒன்று, கடமையானது; மற்றொன்று உபரியானது. ஃபர்ள் என்னவென்றால், அது நீங்கள் ஒரு கடனை திருப்பிக் கொடுப்பது போன்றது. எவரிடமாவது கடனை வாங்கினால் அதனை திருப்பிக் கொடுப்பது ஒருவர் மீது கடமையாகும். அல்லது ஒரு நன்மைக்குப் பகரமாக நன்மை செய்வது. (இதுவும் கடமையாகும். எவராவது நன்மை செய்தால் அதற்கு பதிலாக நீங்களும் நன்மை செய்யுங்கள். அவருடைய உரிமையை செலுத்துங்கள்)

அன்னார் கூறினார்கள்: ஒருவர் நன்மை செய்தார். அவருக்கு நானும் பதிலுக்கு நன்மை செய்து விட்டேன் என்பது மட்டும் நன்மையல்ல. எவராவது உங்களுக்கு நன்மை செய்தால் அதற்கு பிரதிபலனாக நீங்களும் அவருக்கு நன்மை செய்ய வேண்டும். மற்றவர்களுடைய உரிமைகளை செலுத்த வேண்டும். இது உங்கள் மீது கடமையாகும்.

அன்னார் கூறினார்கள்: இந்த ஃபர்ள்களுடன் ஒவ்வொரு நன்மையுடனும் ஒரு நஃபில் நன்மையும் உள்ளது. அதாவது ஒரு நன்மையை அதன் உரிமையை விட அதிகமாக வழங்குவது, கருணை காட்டப்பட்டால் அதற்கு பகரமாக கருணை காட்டுவது மட்டுமின்றி மேலும் அதிகமாக கருணை காட்டுதல், ஒருவர் செய்த நன்மைக்குப் பதில் நன்மை செய்தால் அது சமமான நன்மையாக ஆகி விடுகின்றது. ஆனால் அதைவிட அதிகமாக நன்மையை செய்ய வேண்டும். இது நஃபில் ஆகும்.

அன்னார் கூறினார்கள்: இது கடமையான நன்மைகளை முழுமைப்படுத்துவதும் நிறைவு செய்வதும் ஆகும். அதனால் ஃபர்ள் ஆனது முழுமையாகவும் அதன் எல்லை வரை கொண்டு செல்வதாகவும் ஆகி விடுகிறது. அதாவது இதனால் மனிதன் நன்மைக்கு அதற்கு அதிகமாக நன்மை செய்கிறான்.

அவர்கள் கூறுகிறார்கள்: ஹதீஸில் வருகிறது. அதாவது இறைநேசர்களின் மார்க்கப் பணிகளின் முழுமை நஃபில்களின் மூலமாகவே ஏற்படுகிறது. எடுத்துக்காட்டாக, அதாவது அவர்கள் ஸகாத் கொடுப்பதுடன் ஸதகாவும் கொடுக்கின்றனர்.

அல்லாஹ் அத்தகையோரின் வலி ஆகி விடுகின்றான். அல்லாஹ் அத்தகையோரிடம், எனது நட்பு எத்தகையது என்றால், நான் அவர்களது கை, கால்கள் ஆகி விடுகிறேன். அதுபோன்று அவர்கள் பேசுகின்ற நாவாகி விடுகிறேன் என்று கூறுகின்றான்.

அன்னார் கூறுகிறார்கள்: எப்போது மனிதன் மனதின் எழுச்சிகளிலிருந்து தூய்மையாகி விடுகின்றானோ, மேலும் மன எழுச்சிகளை விட்டு விட்டு இறை திட்டத்திற்கேற்ப செயல்படுகின்றானோ அப்போது அவனது எந்தவொரு செயலும் விலக்கப்பட்டதாக இருப்பதில்லை. மாறாக, எல்லா செயல்களும் இறைவனது விருப்பத்திற்கு ஏற்பவே இருக்கும். எங்கு மக்கள் சோதனையில் விழுகிறார்களோ அங்கு அவர்களது செயல் இறைவனது விருப்பத்திற்கு ஏற்ப இருப்பதில்லை என்பது தெரிகின்றது.

(அல்லாஹ்வின் விருப்பத்திற்கு எதிராக இருந்தால் அங்கு சோதனைகள் ஆரம்பமாகி விடுகிறது.) இறைவனது திருப்தி அதற்கு எதிராக இருக்கிறது. அத்தகைய மனிதர் தனது விருப்பத்தின் கீழ் செல்கிறார். உதாரணமாக, கோபத்தின் விளைவாக எத்தகைய செயல்கள் வெளிப்பட்டு விடுகின்றதென்றால் அதனால் வழக்கு போடப்படும் நிலையும், சிறைக்கு செல்லும் நிலையும் ஏற்படுகிறது. எவருக்காவது இந்நிலை ஏற்பட்டால் அதாவது எந்த நிபந்தனையும் இன்றி இறை வேதம் அவரது அமைதிக்கும் அசைவுக்கும் காரணமாக இருக்கும் என்றால், அவர் தனது ஒவ்வொரு விஷயத்திலும் இறைவனது வேதத்தின் பால் திரும்புவார் என்றால் நிச்சயமாக இறை வேதம் அவருக்கு ஆலோசனை வழங்கும். அல்லாஹ் கூறுகின்றான்:

وَلَا رَطۡبٍ وَّلَا يَابِسٍ اِلَّا فِىۡ كِتٰبٍ مُّبِيۡنٍ – ஈரமானதும், காய்ந்ததும் (ஆன எல்லாம் மிகவும்) தெளிவான (அவனுடைய) நூலில் (பதிவு செய்யப்பட்டு) உள்ளது. **(6:60)** அதாவது திருக்குர்ஆன் எல்லா நன்மையையும், தீமையையும் விரிவாக விளக்கி விட்டது. எவர் அதன்படி செயல்படுவாரோ அவர் பாதுகாக்கப்படுவார்.

அவர்கள் கூறுகிறார்கள்: நாம் இறை வேதத்திலிருந்து ஆலோசனை பெறுவோம் என எண்ணம் வைத்தால் நமக்கு கண்டிப்பாக ஆலோசனை கிடைக்கும். (உலகியல் பணிகளில் மக்களுக்கு வருகின்ற சோதனை அல்லது அவர்கள் ஏதாவதொரு தவறான பணி செய்கின்றார்கள் என்றால் அவர்கள் அல்லாஹ்வின் கட்டளைகளின்படி நடக்கவில்லை. எனவே மனிதன் கஷ்டத்தில் சிக்கிக் கொள்கின்றான்.

இங்கு இந்த வித்தியாசம் தெரிய வேண்டும். அதாவது மார்க்க விவகாரங்களிலும் அல்லாஹ் மனிதனை சோதனைக்கு ஆளாக்குகின்றான். அந்த சோதனையும் கூட நன்மைகளை நன்மைகளை பெறுவதற்காகவே ஆகும்.

அதனால் தான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், நபிமார்களுக்கு அத்தகைய சோதனைகளை அதிகமாக கடக்க வேண்டியதிருக்கின்றது என்று கூறினார்கள். உலகியல் விஷயங்களில் மனிதன் சிக்கலில் மாட்டுகின்றான் என்றால் காரணம் அவன் ஓர் உலகியல்வாதியின் யோசனையை மேற்கொள்கிறான். ஒரு முஃமின் என்ற வாதம் செய்கிறான். ஆனால் நமது நேர்வழிக்கு வழிகாட்டியாக இருக்கின்ற திருக்குர்ஆனின் கட்டளைகளின்படி செயல்பட முயற்சி செய்வதில்லை. அப்போது பிரச்சனைகளை சந்திக்க வேண்டியது வருகிறது. இதனால் சோதனை வருகிறது.)

எவ்வாறிருப்பினும் அன்னார் கூறுகிறார்கள்: எவர் தனது மன உணர்ச்சிகளைப் பின்பற்றுகிறாரோ அவர் கண்டிப்பாக நஷ்டத்தையே சந்திப்பார். (விஷயம் இதில் நன்றாக தெளிவாகி விட்டது. மன உணர்ச்சிகளின் பின்னால் சென்று உலகியல் விவகாரங்களில் நஷ்டத்தை சந்திக்கிறான்.) சிலவேளை அவன் இதனால் பிடிக்கப்படுகிறான். இதற்கு எதிரில் அல்லாஹ் கூறுகின்றான்: வலி என்பவர் நான் கூறுவதற்கேற்ப செல்கிறார்; பணி செய்கிறார். இவர் மாய்ந்து போனவர் ஆவார். எனவே எவரிடம் இந்த மாய்ந்து போன நிலை குறைவாக உள்ளதோ அந்த அளவுக்கு இறைவனை விட்டு அவர் தூர விலகி உள்ளார்.

அவரது மாய்ந்து போவது எத்தகையதாக இருக்குமெனில் இறைவன் கூறியது போன்று அவரது ஈமானை மதிப்பிட முடியாது.அவருக்கு ஆதரவாக இறைவன் கூறுகிறான்.

مَنْ عَادَ لِي وَلِيًّا فَقَدْ آذَنْتُهُ بِالْحَرْبِ அதாவது எவர் எனது வலியை எதிர்க்கின்றவர் என்னை எதிர்ப்பவராவார். (இப்போது பாருங்கள். அத்தகையோருக்கு நன்மையாக விஷயங்களில் இவை ஏற்படும் எனில் அந்த வலிக்கு அல்லாஹ் உதவுகின்றான். மேலும் ஒரு நேரத்தில் அவரது எதிரியை தோல்வி அடையச் செய்கிறான்.) இப்போது பாருங்கள். ஓர் இறையச்சம் உள்ளவரின் மகிமை எவ்வளவு உயர்ந்தது? அவர் பெற்றது எவ்வளவு உயர்ந்தது? அவரது நெருக்கம் இறைவனிடம் எத்தகையது எனில், அவருக்கு துன்பம் தருவது இறைவனுக்கு துன்பம் தருவதாகும். இறைவன் அவருக்கு எந்த அளவுக்கு உதவி ஒத்தாசை செய்பவனாக இருக்கிறான்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 13–15. 1985 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

பிறகு நமக்கு பணிவு, எளிமையான வாழ்க்கை வாழ்வது குறித்து போதனை செய்தவாறு கூறுகின்றார்கள்: தக்வா உள்ளவருக்கு நிபந்தனையாவது, அவர் எளிமையான வாழ்க்கை வாழ வேண்டும். இது தக்வாவின் ஒரு கிளையாகும். அதன் மூலம் நாம் அனுமதியற்ற கோபத்தை எதிர்த்து நிற்க வேண்டும். பெரும் பெரும் இறை ஞானிகள் மற்றும் உண்மையாளர்களுக்கு மிகவும் கடைசியான கட்டம் கோபத்தில் இருந்து தப்பிப்பதாகும். தற்பெருமையும் சூழ்ச்சியும் கோபத்தினால் உருவாகின்றன. அதுபோன்று கோபம் அவற்றின் விளைவாகவும் உள்ளது. மனிதன் தமது நஃப்ஸிற்கு மற்றவரை விட முன்னுரிமை வழங்கும்போது கோபம் உருவாகிறது.

எனது ஜமாஅத்தில் ஒருவர் மற்றவரை பெரியவராகவோ சிறியவராகவோ கருதுவதையோ அல்லது ஒருவர் மற்றவரை தாழ்த்தும் அளவுக்கு அலட்சியமாக பார்ப்பதையும் நான் விரும்பவில்லை. உங்களில் எவர் பெரியவர்? எவர் சிறியவர் என்பதை இறைவனே அறிவான். இது ஒருவகையான இழிவுபடுத்துதல் ஆகும். எவரிடத்தில் இழிவுபடுத்தும் தன்மை இருக்குமோ அது அவரிடம் அதிகமாகி அவரது அழிவுக்கு காரணமாகி விடுமோ என்று அஞ்சுகின்றேன். சிலர் பெரியவர்களை சந்திக்கும்க போது போது பெரும் மரியாதை காட்டுகின்றனர். ஆனால் பெரியவர் எவர் எனில் எளியவரின் பேச்சை எளிமையுடன் கேட்டு அவளது உள்ளத்திற்கு துக்கம் கொடுக்காமல் அவருடைய கூற்றிற்கு கண்ணியம் கொடுப்பவரே ஆவார்.

அல்லாஹ் கூறுகிறான்: وَلَا تَنَابَزُوۡا بِالۡاَلۡقَابِ ؕ بِئۡسَ الِاسۡمُ الۡفُسُوۡقُ بَعۡدَ الۡاِيۡمَانِ அதாவது ஒருவரையொருவர் (தீய) பட்டப் பெயர் சூட்டி அழைக்காதீர்கள். ஏனெனில் நம்பிக்கை கொண்ட பின்னர் கெட்ட பெயர் எடுப்பது மிகவும் தீய ஒன்றாகும். **(49:12)**

وَمَنۡ لَّمۡ يَتُبۡ فَاُولٰٓئِكَ هُمُ الظّٰلِمُوۡنَ அதாவது எவர் தவ்பா செய்யாமல் இவ்விஷயங்களை செய்து கொண்டே இருப்பாரோ அவரே அநீதியிழைப்பவர் ஆவார்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

நீங்கள் எவரைப் பற்றியும் கெட்ட வார்த்தைகளைக் கூறாதீர்கள். இச்செயல் தீய கட்டுப்படாதவர்களின் செயல் ஆகும். எவர், ஒருவரை தீய வார்த்தையில் கூறுவாரோ அவரும் அதே நிலையை அடையாமல் மரணிக்க மாட்டார். உங்கள் சகோதரர்களை இழிவாகக் கருதாதீர்கள். எல்லாரும் ஒரே ஊற்றிலிருந்து நீர் அருந்துகிறீர்கள். அவ்வாறிருக்கும் போது எவர் அதிகம் அருந்தினார் என்று எவருக்கு தெரியும்? உலகியல் விதிமுறைகளின் படி எவரும் கண்ணியத்துக்குரியவராகவோ மகத்துவமிக்கவராகவோ முடியாது. அல்லாஹ்வின் பார்வையில் இறையச்சம் உள்ளவரே பெரியவர் ஆவார். اِنَّ اَكۡرَمَكُمۡ عِنۡدَ اللّٰهِ اَتۡقٰكُمۡ ؕ اِنَّ اللّٰهَ عَلِيۡمٌ خَبِيۡرٌ அதாவது நிச்சயமாக அல்லாஹ்வின் பார்வையில் அதிக கண்ணியத்துக்குரியவர் இறையச்சம் உள்ளவரேயாவார். நிச்சயமாக அல்லாஹ் நிரந்தரமான அறிவுள்ளவனும் எல்லாம் தெரிந்தவனும் ஆவான். **(49:14)**

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 36. 1985 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

அல்லாஹ்வுக்கு எல்லா உண்மை நிலையைப் பற்றிய அறிவு இருக்கின்றது. இவரிடம் உண்மையான தக்வா உள்ளதா? அல்லது காட்டுவதற்கான தக்வா உள்ளதா? என்று அல்லாஹ்வுக்குதான் தெரியும்.

எனவே அல்லாஹ்விற்கு இவை எல்லாவற்றையும் பற்றிய அறிவு இருப்பதனால் நாம் மிகவும் பயபக்தியுடன் நம்மை ஆய்வு செய்தவாறு உண்மையான தக்வாவை அல்லாஹ் கூறியபடி நம்மிடம் உருவாக்க முயற்சி செய்ய வேண்டும்.

ஒரு நம்பிக்கையாளருக்கு அல்லது இறையச்சத்தின்படி செயல்படக்கூடியவருக்கு வெற்றிகள் கிடைக்கும் போது அது எவ்வாறு வெளிப்படுகின்றது? மேலும் ஒரு நிராகரிப்பவர் அவனது வெற்றியை எவ்வாறு வெளிப்படுத்துகின்றான் என்பதைப் பற்றி அன்னார் கூறுகிறார்கள்:

இந்த விதியை நினைவில் கொள்ளுங்கள். முஃமினுடைய பணியாவது, அவருக்கு வெற்றி தரப்படும்போது அவர் வெட்கப்படுகின்றார். மேலும் இறைவனை புகழ்கிறார். (அதாவது எல்லாவற்றையும் அவர் அல்லாஹ்வின் பக்கம் சுட்டிக் காட்டுகிறார். மேலும் அவனை புகழ்கின்றார்.) அவன் அருள் செய்தான். இவ்வாறு காலை முன்னோக்கி வைக்கிறார். ஒவ்வொரு சோதனையிலும் உறுதியாக நின்று ஈமானை பெறுகிறார்.

வெளிப்படையாக, ஒரு இந்து மற்றும் ஒரு முஃமின் ஆகிய இருவரின் வெற்றியும் ஒரு வகையில் ஒன்றாக தெரிகிறது. ஆனால் நினைவில் கொள்ளுங்கள். ஒரு காஃபிரின் வெற்றி வழிகேட்டின் வழியாக உள்ளது. ஒரு முஃமினின் வெற்றியால் அவருக்கு அருட்கொடைகளின் வாசல் திறக்கிறது. காஃபிரின் வெற்றி அவனை ஏன் வழிகேட்டில் எடுத்துச் செல்கிறது எனில் அவர் இறைவன் பக்கம் திரும்புவதில்லை.

மாறாக, அவர் தனது முயற்சி, அறிவுடைமை, மற்றும் தமது தகுதி போன்றவற்றை இறைவனாக்கி விடுகிறார். ஆனால் ஒரு முஃமின் இறைவன் பக்கம் திரும்பியவாறு இறைவனுடன் ஒரு புதிய அறிமுகத்தை உருவாக்குகிறார். இவ்வாறு ஒவ்வொரு வெற்றிக்குப்

பிறகும் இறைவனுடன் ஒரு புதிய தொடர்பு ஏற்படுகிறது. மேலும் அவரிடம் ஒரு மாற்றம் ஏற்படுகிறது.

إِنَّ اللّٰهَ مَعَ الَّذِينَ اتَّقَوْا அதாவது இறைவன் இறையச்சமுள்ளவருடன் இருக்கிறான். நினைவில் கொள்ள வேண்டும். திருக்குர்ஆனில் தக்வா என்ற சொல் பல இடங்களில் வருகிறது. அதற்கு பொருள் முந்தைய சொற்களில் கூறப்படுகிறது. இங்கு مَعَ என்ற சொல் வந்துள்ளது. அதாவது எவர் இறைவனை எல்லாவற்றையும் விட முதன்மையானவனாக வழங்குவாரோ அவருக்கு இறைவன் முன்னுரிமை வழங்குகின்றான். மேலும் அவன் எல்லா விதமான இழிவில் இருந்தும் அவரை காப்பாற்றுகின்றான். எனது ஈமான் இதுதான்.

அதாவது மனிதன் உலகின் எல்லா இழிவுகளிலிருந்தும் அவமானங்களிலிருந்தும் தப்பிக்க விரும்பினால் அதற்குரிய ஒரே வழி இறையச்சம் உடையவராக ஆக வேண்டும் என்பதே ஆகும். பிறகு அவருக்கு எந்த குறைவும் இல்லை. எனவே, முஃமினுடைய வெற்றிகள் அவரை மேலே எடுத்துச் செல்கின்றன. அவர் அங்கேயே நின்று விடுவதில்லை.

பிறகு அன்னார் கூறுகிறார்கள்: பெரும்பாலான மக்களின் நிலைமைகள் நூல்களில் எழுதப்பட்டுள்ளது. அதாவது அவர்கள் உலகுடன் தொடர்பு கொண்டவர்களாக இருந்தனர். மேலும் அதிகம் தொடர்பு வைத்திருந்தனர். ஆனால் அவர்கள் துஆ செய்தனர். மேலும் அது நிறைவேறியது. அதற்குப் பிறகு அவர்களின் நிலையும் மாறியது. எனவே துஆ ஒப்புக் கொள்ளப்படுதல் மற்றும் வெற்றிகளின் மீது பெருமை கொள்ளாதீர்கள். மாறாக இறைவனது கருணைக்கு மதிப்பளியுங்கள். இது அல்லாஹ்வின் அருளாகும். அவன் துஆவை ஒப்புக் கொண்டான். இதற்காக மகிழ்ச்சியும் பெருமை கொள்வதற்கு பதில் அல்லாஹ்வின் அருளின் மீது பார்வையை வையுங்கள்.

அன்னார் கூறுகின்றார்கள்: விதிமுறை என்னவெனில் வெற்றி கிடைப்பதன் மூலமாக விவேகம் மற்றும் தைரியத்தில் ஒரு புதிய வாழ்வு ஏற்படுகிறது. இந்த வாழ்க்கையிலிருந்து பயனடைய வேண்டும். மேலும் இதன் மூலமாக அல்லாஹ்வின் ஞானத்திறை பெறுவதில் முன்னேற்றம் அடைய வேண்டும். (வெற்றி கிடைத்தது.

அல்லது துஆ ஏற்றுக் கொள்ளப்பட்டது எனில் அதன் மூலம் இறைவனை மேலும் கண்டறிய வேண்டும். அவனது இறைஞானத்தைப் பெற வேண்டும்.) ஏனென்றால் மிக உயர்தரமான பயனளிக்கக்கூடிய விஷயம், இறைஞானத்தைப் பெறுவதே ஆகும். அது இறைவனது அருள்கள் மற்றும் உதவிகளைப் பற்றி சிந்திப்பதன் மூலம் கிடைக்கிறது. அல்லாஹ்வின் அருளை எவரும் தடுக்க முடியாது.

அவர்கள் கூறுகிறார்கள்: கடும் வறுமையும் கூட மனிதனை கஷ்டத்தில் ஆழ்த்தி விடுகின்றது. எனவே ஹதீஸில் வருகிறது. اَلْفَقْرُ سَوَادُ الْوَجْهِ (அதாவது வறுமை முகத்தை மாற்றி விடுகின்றது. அல்லது கருப்பாக்கி விடுகிறது. வறுமையின் காரணத்தால் மனிதன் சில நேரங்களில் மார்க்கத்தை விட்டும் விலகி விடுகிறான்.)

அவர்கள் கூறுகிறார்கள்: அத்தகைய மனிதனை நானே பார்த்துள்ளேன். அவர்கள் தமது வறுமையின் காரணத்தால் நாத்திகராகி விட்டனர். ஆனால் ஒரு முஃமின் வறுமையிலும் கூட இறைவன் மீது தவறான எண்ணம் கொள்ள மாட்டார். மேலும் அது தனது தவறின் விளைவு என்று கருதி, கருணை மற்றும் அருளை வேண்டுகிறார். அந்த காலம் கழிந்து அவரது துஆ ஒப்புக் கொள்ளப்பட்டால் பிறகும் பணிவை மேற்கொண்ட அக்காலகட்டத்தை மறக்க மாட்டார்.

மாறாக, அதை நினைவில் வைத்திருப்பார். ஆக, அல்லாஹ்விடம் நமது பணி இருக்கின்றது என்று எவர் நம்புவாரோ அவர் இறையச்சத்தை மேற்கொள்ள வேண்டும். மகிழ்ச்சி மற்றும் வெற்றியின் தருணத்தில் இறையச்சத்தை மேற்கொள்பவர் அருளுக்குரியவர் ஆவார். தடுமாறி அவன் பக்கம் குனியாமல் இருப்பவர் பேரிழந்தவர் ஆவார்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 155–157. 1985 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

அன்னார் கூறுகிறார்கள்: தக்வாவை மேற்கொள்பவர்களுக்கு அல்லாஹ்வின் உதவிகள் கிடைக்கின்றன. தக்வா என்பது தீமையிலிருந்து விலகியிருப்பதற்கு கூறப்படும். முஹ்ஸினூன் என்பவர் தீமையிலிருந்து மட்டும் விலகுபவர் அல்ல; மாறாக, அவர் நன்மையும் செய்பவராவார்.

மேலும் கூறுகிறார்கள்:

لِلَّذِينَ اَحْسَنُوا الْحُسْنٰى அதாவது இந்த நன்மைகளை நன்றாக கவனித்து செய்பவர் ஆவார். இந்த வசனத்துக்கு விளக்கம் தருகிறார்கள்.

إِنَّ اللّٰهَ مَعَ الَّذِينَ اتَّقَوْا وَالَّذِينَ هُمْ مُّحْسِنُوْنَ அதாவது நிச்சயமாக இறைவன் இறையச்சத்தை மேற்கொள்பவர்களுடனும், பேருபகாரம் செய்பவர்களுடனும் இருக்கின்றான்.

அன்னார் கூறுகின்றார்கள்:

إِنَّ اللّٰهَ مَعَ الَّذِينَ اتَّقَوْا وَالَّذِينَ هُمْ مُّحْسِنُوْنَ எனக்கு இந்த வஹி மீண்டும் மீண்டும் வந்தது. இது எத்தனை முறை வந்தது என்று என்னால் எண்ண முடியாது. இரண்டாயிரம் முறை வந்திருக்கலாம். இறைவனே அறிவான். இதன் நோக்கம் என்னவெனில், ஜமாத்திற்கு தெரிய வேண்டும்.

இவ்விஷயத்தில் அவர்கள் ஏமாந்து விடக் கூடாது. நாம் இந்த ஜமாஅத்தில் சேர்ந்து விட்டோம் என்று அவர்கள் திருப்தி அடைந்து விடக் கூடாது. அல்லது நல்லெண்ணத்தில் ஈமானில் திருப்தி அடைந்து விடக் கூடாது. அல்லாஹ்வின் அருகாமையும், உதவியும் உண்மையான தக்வாவுடன் நன்மையும் இணைந்திருக்கும் போதே கிடைக்கின்றது.

(மல்ஃபூஸாத் தொகுதி 8 பக்கம் 371. 1985 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

அன்னார் மேலும் கூறுகின்றார்கள்:

إِنَّ اللّٰهَ مَعَ الَّذِينَ اتَّقَوْا وَالَّذِينَ هُمْ مُّحْسِنُوْنَ (16:129).

இறைவனும் மனிதனின் செயல்களுக்குரிய ஒரு பதிவேட்டை வைத்துள்ளான். எனவே மனிதனும் தனது செயல்களின் ஒரு பதிவேட்டை வைத்திருக்க வேண்டும். தான் நன்மையில் எந்த அளவுக்கு முன்னேறினோம் என்று பார்க்க வேண்டும்.

மனிதனது நேற்றும் இன்றும் ஒன்று போல் இருக்கக் கூடாது. நேற்றைக்கும் இன்றைக்கும் என்ன வித்தியாசம் உள்ளது? என்று பார்க்க வேண்டும். முன்னேறவும் இல்லை எனில் அவர் நஷ்டத்தில் இருக்கிறார்.

மனிதன் இறைவனை ஏற்றுக் கொள்பவராகவும் அவன் மீது முழுமையான நம்பிக்கை உள்ளவராகவும் இருந்தால் அவர் வீணாக்கப்பட மாட்டார். அத்தகைய ஒருவருக்காக இலட்சக்கணக்கானோர் பாதுகாப்படுகின்றனர்.

உதாரணமாக அவர்கள் கூறுகின்றார்கள்: ஒரு மனிதர் அல்லாஹ்வின் அவ்லியாக்களைச் சார்ந்தவராக இருந்தார். அவர் ஒரு கப்பலில் சென்று கொண்டிருந்தார். கடலில் புயல் வந்தது. கப்பல் மூழ்கும் நிலை ஏற்பட்டது. ஆனால் அவரது துஆவினால் காப்பாற்றப்பட்டது. துஆ செய்தபோது உனக்காவே எல்லாரையும் காப்பாற்றினோம் என்று அவருக்கு இல்ஹாம் இறங்கியது.

அன்னார் கூறுகிறார்கள்: இவை வெறும் வாய் வார்த்தைகளைக் கொண்டு நடக்காது. மாறாக, இதற்காக உழைக்க வேண்டியது வருகின்றது.

(மல்ஃபூஸாத் தொகுதி 10 பக்கம் 137–138. 1985 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

அன்னார் கூறுகிறார்கள். என்னுடனும் اِنِّىْ اُحَافِظُ كُلَّ مَنْ فِى الدَّارِ என்ற இறைவனது வாக்குறுதி உள்ளது.

(மல்ஃபூஸாத் தொகுதி 10 பக்கம் 138. 1985 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

இதற்காக நீங்களும் முதலில் தக்வாவை மேற்கொள்வது அவசியமாகும். அந்த துஆவில் நீங்களும் பங்கு பெறுவதற்கு உங்களை தகுதியுள்ளவர்களாக ஆக்கிக் கொள்ள வேண்டும். அப்போதுதான் உங்களுக்காகவும் எனது துஆ ஒப்புக் கொள்ளப்படும். அதற்காக தக்வா அவசியமானது.

அல்லாஹ் நமக்கு இந்த நோன்பை தக்வாவுடன் நோற்பதற்கும், இறைவணக்கம் செய்வதற்கும், மேலும் மற்ற உரிமைகளை செலுத்துவதற்கும் வாய்ப்பு தருவானாக. ஜமாஅத்திற்கும், உலகத்திற்கும் இந்த ரமலான் அருளுக்குரியதாக இருக்கட்டுமாக.

பாகிஸ்தானில் ஜமாஅத்தின் நிலைமைகளில் ஒவ்வொரு நாளும் கடினம் உருவாக்கப்படுகின்றது. அவர்களுக்காகவும் குறிப்பாக துஆசெய்யுங்கள். அல்லாஹ் அருள் புரிவானாக. எங்கு நாம் நோன்பின் கடமைகளை நிறைவேற்றுபவர்களாக இருக்கின்றோமோ அங்கு தக்வாவின் படி நடந்தவாறு உரிமைகளை செலுத்தக் கூடியவர்களாக இருப்போமாக. மேலும் துஆவின் பக்கம் கவனம் செலுத்தப்பவராக இருப்போமாக.

அல்லாஹ் முஸ்லிம்கள் மீதும் கருணை காட்டுபவனாக. அவர்களின் ஆட்சியாளர்கள், அதிகாரத்தில் இருப்பவர்கள், அவர்களின் மார்க்க அறிஞர்களுக்கு அறிவை வழங்குவானாக. அவ்வாறே உலகத்திற்கும் அவர்கள் காலத்தின் இமாமை ஏற்றுக் கொள்பவர்களாக விளங்குவார்களாக.

அதுபோன்று உலகிலும் ஒவ்வொரு நாளும் ஒரு செய்தி வருகிறது. தினமும் போர் சவால் மூட்டப்படுகிறது என்றும் இன்று முடியப் போகிறது என்றும் செய்திகள் வருகிறது. வெளிப்படையாக பார்க்கும் போது பெரிய சக்திகள் போரின் பக்கம் செல்வதாகவே தெரிகிறது. அதில் எந்த தடையும் ஏற்படுவதற்கான அறிகுறிகள் தெரியவில்லை.

எனவே அல்லாஹ் முஸ்லிம்களுக்கும் குறிப்பாக அஹ்மதிகளுக்கும் இந்த போரின் தீய தாக்கத்திலிருந்து பாதுகாப்பை வழங்குவானாக.

பொதுவாக மனித இனத்தையும் இதன் தீய தாக்கத்திலிருந்து பாதுகாப்பானாக. இப்போதும் கூட அல்லாஹ்விடம் இம்மக்களுக்கு சீர்திருத்தம் ஏற்பட வழி இருக்கும் எனில் அல்லாஹ் அவர்களை சீர்திருத்துவானாக. அவர்கள் அல்லாஹ்வை அடையாளங்கண்டு கொள்பவர்களாக ஆவார்களாக.

அல்லாஹ்வை அறிந்து கொள்ளும் நிலையை அல்லாஹ் உருவாக்குவானாக. அதன் மூலம் அவர்கள் அழிவிலிருந்து தப்பிப்பார்களாக.

# ஜுமுஆ பேருரை

இறுதிக்காலத்தில் நபித்துவத்தின் வழியில் கிலாஃபத் அமையும் என்பது நமக்கு திருக்குர்ஆனிலிருந்தும் தெரிய வருகின்றது. நபித்துவ வழியில் கிலாஃபத் நிலைபெறும் என்று நபிமொழிகளிலிருந்தும் நமக்கு தெரிய வருகின்றது. இந்த கிலாஃபத் நிரந்தரமான கிலாஃபத் ஆகும். மேலும் நமக்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் இது தொடர்பாக மிக தெளிவாக விளக்கியுள்ளார்கள். எனக்குப் பிறகு கிலாஃபத் நிலைபெறும். அது நிரந்தரமாக நிலைபெற்றிருக்கும். ஆயினும் அத்துடன் அல்லாஹ் இந்த வசனங்களில் முஸ்லிம்களுக்கு இதனையும் விவரித்திருக்கின்றான். கிலாஃபத்தின் வாக்குறுதிகளிலிருந்து பங்கு பெறுவதற்கும் அதன் அருட்களில் பங்கு பெறுவதற்கும் தத்தமது நிலைகளை மாற்ற வேண்டியது அவசியமாகும். வெறும் முஸ்லிம் என்று அழைக்கப்படுவதாலோ, வெறும் வாயளவிலான ஈமானை வெளிப்படுத்துவதாலோ கிலாஃபத் எனும் அருட்கொடைக்கு உரிமையுடையவர்களாக அவர்களை ஆக்கி விடாது. எனவே அல்லாஹ் முஸ்லிம்களுக்கு இந்த அறிவுரையை செய்திருக்கின்றான். அதாவது இறை வணக்கத்திற்குரிய உரிமையை வழங்குவதற்காகவும், இணை வைப்பதிலிருந்து விலகி இருப்பதற்காகவும் தொழுகைகளை நிறைவேற்றுங்கள். ஸக்காத் வழங்குங்கள். இறைத்தூதருக்கு கட்டுப்பட்டு நடங்கள். அப்போது தான் உங்களால் அல்லாஹ்வின் கருணையை ஈர்க்க முடியும்

---

அதே போன்று தூதருக்கு கட்டுப்படுவதின் ஒரு நோக்கம் என்னவென்றால், ஒற்றுமை எனும் சரடில் பிணைக்கப்படுவதாகும். அது கிலாஃபத் இன்றி நடைபெறாது

---

இரண்டு நாட்களுக்கு முன்பு சியால்கோட்டிலுள்ள நமது மஸ்ஜிதில் இவ்வாறு நடைபெற்றுள்ளது. மஸ்ஜிது மற்றும் அதனுடன் இணைந்திருந்த வீட்டின் மீது போலீஸ் மற்றும் நகர அமைப்பின் முன்னிலையில் இன்னும் சொல்லப்போனால் அவர்களின் தலைமையில் மவ்லவிகளும் அவர்களின் சில நூறு சீடர்களும் இணைந்து தாக்குதல் நடத்தினர். மாபெரும் பணியை அவர்கள் செய்து விட்டதாக நினைக்கின்றனர். மேலும் நாங்கள் இன்னும் பல பள்ளிவாசல்களுக்கு சேதத்தை ஏற்படுத்தி இடிப்போம் என்று அறிவிப்பு செய்தார்கள்

---

இவர்கள் ஹஸ்ரத நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது முன்னறிவிப்பிற்கேற்ப நிலைபெற்றுள்ள கிலாஃபத்தை ஏற்றுக் கொள்ளாதவரை இதுபோன்ற செயல்களை செய்து கொண்டே இருப்பார்கள். மேலும் இவர்கள் மீது எவ்வகையான நன்மைக்கான எதிர்பார்ப்பையும் நம்மால் வைக்க முடியாது

---

நமது உணர்வுகளைப் பொருத்தவரை எதிரிகள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஒரு நினைவுச் சின்னத்தை சேதப்படுத்தியுள்ளனர். எப்போதும் போன்றே நாம் இன்னமா அஷ்கூ பஸ்ஸி வ ஹுஸ்னி இலல்லாஹ் என்றே பதில் கூறுவோம். இதுவே பதிலாகவும் இருக்க வேண்டும். அதாவது நான் எனது துன்பத்தையும், முறையீட்டையும் அல்லாஹ்வின் முன்பே வைக்கின்றேன். நிச்சயமாக அந்த இடத்துடன் நமக்கு உணர்வுப்பூர்வமான தொடர்பு இருக்கின்றது. ஆயினும், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடனான உன்னத தொடர்பின் வெளிப்பாடு என்பது வெறும் கட்டடங்களை பாதுகாப்பதன் மூலமாக மட்டுமல்ல

---

மாறாக, அன்னாரின் போதனைகளின்படி செயல்படுவதன் மூலம் ஆகும். அன்னாருக்குப் பிறகு கிலாஃபத் அமைப்புடன் இணைந்திருப்பதன் மூலம் ஆகும். மேலும் கிலாஃபத்தின் அருள்களிலிருந்து பயன் பெறுவதற்கு இறைவன் கூறிய விஷயங்களை பெற்றுக் கொள்வதன் மூலம் ஆகும். தமது இறைவணக்கத்தின் தரத்தை உயர்த்திக் கொள்வதன் மூலம் ஆகும். அல்லாஹ்வின் கட்டளையின்படி அமல் செய்வதன் மூலம் ஆகும். தனது கட்டுப்படுதலின் தரத்தை உயர்த்துவதன் மூலம் ஆகும். எனவே இதற்காக நாம் முயற்சி செய்ய வேண்டும்.

---

அஹ்மதிய்யா ஜமாஅத் இறை இருப்பிற்கான தெளிவான சான்றுகளை வழங்குவதற்காகவே நிலைநாட்டப்பட்டுள்ளது. ஏகத்தவத்தை மீண்டும் நிலைநாட்ட வேண்டும். நல்லொழுக்கங்களை மீண்டும் புத்தம் புதிதாக நிலைநாட்ட வேண்டும்

---

நாம் எப்போதும் நம்மை நாமே ஆய்வு செய்து கொண்டிருக்க வேண்டும். அல்லாஹ் கிலாஃபத்துடன் தொடர்புடைய அருள்களை பெற்றுக் கொள்வதற்கு எந்த விஷயங்கள் மற்றும் பணிகளை செய்ய கட்டளையிட்டிருக்கின்றானோ நாம் அதற்கேற்ப நமது வாழ்க்கையை ஆக்கிக் கொள்வதற்கு முயற்சி செய்கின்றோமா? இல்லையா? என்றும் நாம் ஆய்வு செய்ய வேண்டும்

---

நமது தரம் என்ன? என்பதையும் பார்க்க வேண்டும். நமது இறைவணக்கங்கள் எப்படி இருக்கின்றன? நமது தொழுகைகள் எப்படி இருக்கின்றன? நமது ஒவ்வொரு சொல்லும் செயலும் இணை வைத்தலிருந்து தூய்மையானதாக இருக்கின்றதா? இல்லையா? நமது பொருளாதார தியாகத்தின் தரம் என்ன? நமது கட்டுப்படுதலின் தரம் என்ன? அல்லாஹ் மற்றும் அவனது தூதர் (ஸல்) அவர்கள் எப்படி விரும்புகின்றார்களோ அப்படிப்பட்ட தரத்தை நாம் பெறக்கூடியவர்களாக இருக்கின்றோமா? இல்லையா? அடுத்து, இக்காலத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எந்த தரத்தில் தனது ஜமாஅத்தைச் சார்ந்தவர்களை பார்க்க விரும்புகின்றார்களோ நாம் அந்த தரத்தை அடைவதற்கு முயற்சி செய்கின்றோமா? இல்லையா? என்று நாம் நம்மை நாமே ஆய்வு செய்ய வேண்டும்

---

கிலாஃபத்திலிருந்து அருள் பெறக்கூடியவர்களுக்கு ஸக்காத் கொடுப்பது மற்றும் பொருள் தியாகம் செய்வது அவசியமாக்கப்பட்டுள்ளது. ஸக்காத் மற்றும் செல்வங்களின் செலவீனங்கள் என்பது கிலாஃத்தின் கீழ் தான் சிறந்த முறையில் நடைபெற முடியும். ஜமாஅத் அமைப்பும் உள்ளது. அதனிடம் தேவையுடையவர்களின் பட்டியல் சிறந்த முறையில் உள்ளது. இருக்கவும் முடியும். ஜமாஅத்துகள் நன்கு ஆய்வு செய்து அந்த பட்டியலை தயார் செய்ய வேண்டும்

---

தொழுகை வீணானவற்றிலிருந்து தவிர்ந்திருப்பதன் பக்கமும் அல்லாஹ்வின் கட்டளைகளை மேற்கொள்வதன் பக்கமும் கொண்டு செல்கின்றது. மேலும் தமது செல்வத்தை வீணான வழிகளில் செலவு செய்வதற்கு பகரமாக அல்லாஹ்வின் வழியில் செலவு செய்வதன் பக்கம் கவனம் ஏற்படுகின்றது

---

அல்லாஹ் கிலாஃபத் எனும் அருட்கொடையைப் பெறக் கூடியவர்கள் கட்டுப்படுதலின் தரத்தை மேம்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அறிவுரை வழங்குகின்றான்

---

நாம் நமது இறைவணக்கத்தின் தரத்தையும் உயர்த்த வேண்டும். நாம் நமது தொழுகைகளையும் பாதுகாக்க வேண்டும். நமது ஒவ்வொரு சொல்லையும், செயலையும் எல்லா வகையான இணை வைத்தலிலிருந்தும் முற்றிலுமாக பாதுகாக்க வேண்டும். நமது செல்வத்தை அல்லாஹ்வின் வழியில் நாம் செலவிட வேண்டும். கிலாஃபத்துடனான நன்றியுணர்வு மற்றும் கட்டுப்படுதலில் எப்பொழுதும் உயர் தரத்தை அடைய வேண்டும். அப்போது தான் கிலாஃபத் எனும் அருள் மற்றும் அத்துடன் இறைவன் வைத்துள்ள பயன்களை நாம் பெற முடியும். அதன் மூலமே கியாமத் நாள் வரை நிலைபெறும் கிலாஃபத்துடன் நாம் நிலைத்திருக்க முடியும். மேலும் நாம் நமது அடுத்த தலைமுறையினரையும் அதனுடன் நம்மால் இணைத்து வைத்திருக்க முடியும்

சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்
(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்**
**25 மே 2018** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1397 -ஆம் ஆண்டு **ஹிஜ்ரத்** மாதம் **25 -ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ
وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ
بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ -
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ - الرَّحْمٰنِ الرَّحِيْمِ -
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ - إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ -
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ - صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ
وَعَدَ اللهُ الَّذِيْنَ اٰمَنُوْا مِنْكُمْ وَعَمِلُوا الصّٰلِحٰتِ لَيَسْتَخْلِفَنَّهُمْ
فِي الْأَرْضِ كَمَا اسْتَخْلَفَ الَّذِيْنَ مِنْ قَبْلِهِمْ
وَلَيُمَكِّنَنَّ لَهُمْ دِيْنَهُمُ الَّذِي ارْتَضٰى لَهُمْ وَلَيُبَدِّلَنَّهُمْ
مِّنْ بَعْدِ خَوْفِهِمْ أَمْنًا ۚ يَعْبُدُوْنَنِيْ لَا يُشْرِكُوْنَ بِيْ شَيْئًا ۚ
وَمَنْ كَفَرَ بَعْدَ ذٰلِكَ فَأُولٰٓئِكَ هُمُ الْفٰسِقُوْنَ ۝
وَأَقِيْمُوا الصَّلٰوةَ وَاٰتُوا الزَّكٰوةَ
وَأَطِيْعُوا الرَّسُوْلَ لَعَلَّكُمْ تُرْحَمُوْنَ ۝

இந்த வசனங்களின் பொருள் இவ்வாறாகும். அதாவது அல்லாஹ் உங்களுள் நம்பிக்கை கொண்டு நற்செயல் ஆற்றுபவர்களை அவர்களின் முன்னோர்களை கலீஃபாக்களாக ஆக்கியது போன்று இப்பூமியில் கலீஃபாக்களாக ஆக்குவதாகவும் அவன் அவர்களுக்காக விரும்பிய அவர்களின் மார்க்கத்தை அவர்களுக்கு உறுதிப்படுத்துவதாகவும் அவன் அவர்களுக்கு அவர்களது அச்சத்திற்குப் பிறகு அதற்கு பதிலாக அமைதியினை வழங்குவதாகவும் அவர்களிடம் வாக்குறுதி அளித்துள்ளான்.

அவர்கள் என்னை வணங்குவார்கள். எதனையும் எனக்கு இணையாக்க மாட்டார்கள். இதன் பின்னரும் நிராகரிப்பவர்கள் கட்டுப்படாதவர்கள் ஆவார்கள். நீங்கள் தொழுகையை நிறைவேற்றுங்கள். மேலும் ஸக்காத் கொடுங்கள். மேலும் இத்தூதருக்கு கட்டுப்பட்டு நடங்கள். அப்போது தான் உங்கள் மீது கருணை காட்டப்படும். (24:56,57)

இந்த வசனங்களில் அல்லாஹ்வின் ஒரு வாக்குறுதி பற்றி கூறப்பட்டுள்ளது. இவ்வாறு இவ்வாறு செய்தால் அல்லாஹ் உங்களுக்கு அருட்கொடையை வழங்குவான் என அல்லாஹ் இங்கு ஒரு வாக்குறுதி செய்துள்ளான். அது கிலாஃபத் எனும் அருட்கொடையாகும். அதன் விளைவாக மார்க்கம் வலிமை பெறும். மேலும் அச்சத்தின் நிலைக்குப் பிறகு அமைதி நிலை உருவாகும்.

ஆக, இது வாக்குறுதியாகும்; முன்னறிவிப்பல்ல என்பது தெளிவானதாகும். அல்லாஹ் நிச்சயமாக வழங்குவான் என்று கூறவில்லை. ஆயினும் எவர்கள் அவனது நிபந்தனையை நிறைவேற்றுவார்களோ அவர்களுக்கு வழங்குவான் என்றே அல்லாஹ் கூறுகின்றான். ஆக, நிபந்தனையுடன் அல்லாஹ் வாக்குறுதி வழங்கியுள்ளான். அந்த நிபந்தனை என்ன? அல்லாஹ் கூறுகின்றான். அவர்கள் என்னை வணங்கக்கூடியவர்களாக இருப்பார்கள். இணை வைப்பதிலிருந்து முற்றிலுமாக விலகி இருப்பார்கள்.

இறைவணக்கம் செய்யக்கூடியவர்களாக இல்லையென்றால், இறைவணக்கத்திற்குரிய உரிமையை வழுங்கவில்லை என்றால், அல்லாஹ் எவ்வாறு விரும்புகிறானோ அவ்வாறு இணை வைப்பதிலிருந்து விலகி இருக்கவில்லை என்றால் பின்னர் அவர்களால் இந்த வாக்குறுதிகளிலிருந்து முழுமையான முறையில் பயன்பெற முடியாது.

இந்த நிபந்தனையை முழுமை செய்யவில்லை என்றால் கிலாஃபத் இருந்தாலும் கூட இப்படிப்பட்ட மக்களால் கிலாஃபத்திலிருந்து முழுமையான முறையில் பலன்பெற முடியாது. இறுதிக்காலத்தில் நபித்துவத்தின் வழியில் கிலாஃபத் அமையும் என்பது நமக்கு திருக்குர்ஆனிலிருந்தும் தெரிய வருகின்றது. நபித்துவ வழியில் கிலாஃபத் நிலைபெறும் என்று நபிமொழிகளிலிருந்தும் நமக்கு தெரிய வருகின்றது. இந்த கிலாஃபத் நிரந்தரமான கிலாஃபத் ஆகும்.

மேலும் நமக்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் இது தொடர்பாக மிக தெளிவாக விளக்கியுள்ளார்கள். எனக்குப் பிறகு கிலாஃபத் நிலைபெறும். அது நிரந்தரமாக நிலைபெற்றிருக்கும்.

ஆயினும் அத்துடன் அல்லாஹ் இந்த வசனங்களில் முஸ்லிம்களுக்கு இதனையும் விவரித்திருக்கின்றான்.அதாவது கிலாஃபத்தின் வாக்குறுதிகளிலிருந்து பங்கு பெறுவதற்கும் அதன் அருட்களில் பங்கு பெறுவதற்கும் தத்தமது நிலைகளை மாற்ற வேண்டியது அவசியமாகும். வெறும் முஸ்லிம் என்று அழைக்கப்படுவதாலோ, வெறும் வாயளவிலான ஈமானை வெளிப்படுத்துவதாலோ கிலாஃபத் எனும் அருட்கொடைக்கு உரிமையுடையவர்களாக அவர்களை ஆக்கி விடாது.

எனவே அல்லாஹ் முஸ்லிம்களுக்கு இந்த அறிவுரையை செய்திருக்கின்றான். அதாவது இறை வணக்கத்திற்குரிய உரிமையை வழங்குவதற்காகவும், இணை வைப்பதிலிருந்து விலகி இருப்பதற்காகவும் தொழுகைகளை நிறைவேற்றுங்கள். ஸக்காத் வழங்குங்கள். இறைத்தூதருக்கு கட்டுப்பட்டு நடங்கள். அப்போது தான் உங்களால் அல்லாஹ்வின் கருணையை ஈர்க்க முடியும். அல்லாஹ்வின் தூதருக்கு கட்டுப்படுவது தொடர்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நமக்கு கூறிய இந்த விஷயத்தை நாம் நினைவில் வைக்க வேண்டும்.

அதாவது எவர் என்னால் நியமிக்கப்பட்ட அமீருக்கு கட்டுப்பட்டாரோ அவர் எனக்கு கட்டுப்பட்டவராவார். எவர் என்னால் நியமிக்கப்பட்ட அமீருக்கு கட்டுப்படவில்லையோ அவர் எனக்கு கட்டுப்படவில்லை. மேலும் கிலாஃபத் எனும் அமைப்பில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களால் நியமிக்கப்பட்ட அமீர் என்பவர் மற்ற எல்லாரையும் விட கலீஃபாவே ஆவார்.

எனவே இவ்விஷயத்திலிருந்து நமக்கு தெளிவாவது என்னவென்றால், எவ்வாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு கட்டுப்பட்டு நடப்பது அவசியமோ அதே போன்று கிலாஃபத்திற்கு கட்டுப்படுதலும் அவசியமாகும். ஆனால் இங்கு கிலாஃபத் என்பது உலகியல் எஜமானர்களின் உதவியுடன் வலுக்கட்டாயமாக பறித்துக் கொள்ளப்பட்ட கிலாஃபத் ஆகாது. மாறாக, இங்கு கூறப்பட்டுள்ள கிலாஃபத் என்பது நபித்துவ வழியில் அமைகின்ற கிலாஃபத் ஆகும்.

மேலும் அது தொடர்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மிகத் தெளிவாக வழிகாட்டியுள்ளார்கள். அந்த கிலாஃபத் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் வருகைக்குப் பின்னர் அமைகின்ற கிலாஃபத் ஆகும். அன்னார் மூலமே இந்த கிலாஃபத் எனும் தொடர் நிலைபெறும். ஏனென்றால் அன்னார் முஹம்மதிய்ய தொடரின் காத்தமுல் குலஃபாவாக இருக்கின்றார்கள். அந்த கிலாஃபத் எவருடனும் எந்த யுத்தமும் செய்யாது. எந்த அநீதியும் இழைக்காது.

மாறாக, தொழுகையை நிலைநாட்டுவதன் பக்கமும், மார்க்கத்தை பரப்புவதன் பக்கமும், அடியார்களுக்குரிய உரிமையை வழங்குவதன் பக்கமும், ஸக்காத் கொடுப்பதன் பக்கமும், பொருள் தியாகத்தின் பக்கமும் அந்த கிலாஃபத் கவனமூட்டும். எனவே இந்த அமைப்பும் கூட தற்போது அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தில் மட்டுமே நிலைபெற்றுள்ளது.

அதே போன்று தூதருக்கு கட்டுப்படுவதின் ஒரு நோக்கம் என்னவென்றால், ஒற்றுமை எனும் சரடில் பிணைக்கப்படுவதாகும். அது கிலாஃபத் இன்றி நடைபெறாது. ஏனைய முஸ்லிம்கள் தொழவும் செய்கின்றார்கள். ஆனால் அவர்களிடத்தில் ஒற்றுமை இல்லாத காரணத்தால் அவர்களிடம் உள்ளங்கள் பிளவுபட்டுக்கிடக்கின்றது.

ஒரே காரியமாக இருந்த போதிலும் அதில் கருத்து வேறுபாடுகளில் மூழ்கி இருக்கின்றார்கள். ஆலிம்கள் தமது பதவியை தக்கவைத்துக் கொள்ளவும், தமது நோக்கத்திற்காகவும் தீய செயல்களில் ஈடுபடுகின்றனர். தற்போது பாகிஸ்தானிய முல்லாக்களின் நோக்கம் அரசியலாகி விட்டது. ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொண்டிருக்கின்றனர். அவர்களுக்கு பின்னால் செல்பவர்களின் நிலைகளும் இவ்வாறே உள்ளது.

சில காலத்திற்கு முன்னர் பாகிஸ்தானில் அரசாங்கத்திற்கு எதிராக போராட்டங்கள் நடந்து வந்தன. அதன் பிறகு ஆலிம்களின் இரண்டு பிரிவு தங்களுக்குள் மோதிக் கொண்டன. ஒருவர், லெப்பகை யா ரஸூலல்லாஹ் என்ற பெயரால் அரசியலில் தனது சுய நலனை அடைவதற்கு முயற்சி செய்து தலைவராக முயன்றார். இன்னொருவர், கத்மே நுபுவ்வத் என்ற பெயரால் தனது வியாபாரத்தை ஒளிமயமாக்க முயன்றார்.

தொலைக்காட்சியின் மூலமாக உலகம் இந்த வேடிக்கையை பார்த்தது. ஏராளமான சேனல்கள் இந்த காட்சியை ஒளிபரப்பின. அதன் பின்னரும் கூட அவர்களுக்குப் பின்னால் செல்கின்ற மக்களுக்கு நாம் எப்படிப்பட்ட நபர்களுக்கு பின்னால் செல்கின்றோம் என்பது புரியவில்லை. இந்த ஆலிம்கள் பொது மக்களுக்காக மார்க்கத்தை வலுவூட்டுவதற்கு காரணிகளாக இருக்க முடியுமா? அது ஒருபோதும் நடக்காது. ஏனெனில் அவர்களே சுயம் சீர்கெட்டுக் கிடக்கின்றனர்.

மேலும் இந்த காலத்தின் ஆலிம்கள் மிக கெட்ட படைப்பாக இருப்பார்கள் என்ற

நபிமொழியின் அடிப்படையில் அவர்கள் வழிகெட்டுக் கிடக்கின்றார்கள்.

**(அல் ஜாமிவுஷ் ஷுஅபுல் ஈமான் தொகுதி 3 பக்கம் 317–318, ஹதீஸ் எண் 1763)**

ஸக்காத் கொடுக்கின்றார்கள். ஆனால் அதனை எப்படி செலவிடுகின்றார்கள் என்று எவருக்கும் தெரிவதில்லை. நாங்கள் ஏழைகளுக்காக அதனை செலவிடுகின்றோம் என அரசாங்கம் வாதிடுகின்றது. ஆனால் கோடிக்கணக்கான பணம் கொள்ளையடிக்கப்படுகின்றது. அதைப் பற்றிய செய்திகள் ஊடகடங்களில் வருகின்றன. இஸ்லாத்தை பரப்புவதற்கான கேள்விக்கு இடமேயில்லை. இஸ்லாத்தின் பெயரால் நிலைபெற்றுள்ள அரசாங்கங்கள் எண்ணெய் வளத்தால் செழித்திருக்கின்ற அரசாங்கங்கள் என்ன செய்து கொண்டிருக்கின்றன?

இஸ்லாத்தை பரப்புவதற்கான எந்த பணிகளும் அவர்கள் மூலமாக நடைபெறவில்லை. இன்று இந்த பணியையும் தியாகம் செய்தவாறு யாராவது செய்கின்றார்கள் என்றால் அது அஹ்மதிய்யா ஜமாஅத் மட்டுமே ஆகும். ஆக, இந்த அமைப்பும் கூட கிலாஃபத் நிலைபெற்றிருக்கும் வரை தான் தொடர முடியும். சில ஆலிம்கள் மற்றும் நடுநிலையான மக்கள் கிலாஃபத் என்னுடன் அமைப்பு அவசியமாகும் என்பதை ஒப்புக் கொள்கின்றனர்.

ஆயினும் அல்லாஹ் ஏற்படுத்தியுள்ள அமைப்பை ஏற்றுக் கொள்ளுங்களேன் என்று கூறப்பட்டால் அதனை ஏற்றுக் கொள்வதற்கு அவர்கள் தயாரில்லை.

இன்னும் சொல்வதென்றால், எதிர்ப்பில் முன்னேறுகின்றார்கள். இந்த எதிர்ப்பிற்கான சமீபத்திய சம்பவம் இரண்டு நாட்களுக்கு முன்பு சியால்கோட்டிலுள்ள நமது மஸ்ஜிதில் இவ்வாறு நடைபெற்றுள்ளது. மஸ்ஜிது மற்றும் அதனுடன் இணைந்திருந்த வீட்டின் மீது போலீஸ் மற்றும் நகர அமைப்பின் முன்னிலையில் இன்னும் சொல்லப்போனால் அவர்களின் தலைமையில் மவ்லவிகளும் அவர்களின் சில நூறு சீடர்களும் இணைந்து தாக்குதல் நடத்தினர். மாபெரும் பணியை அவர்கள் செய்து விட்டதாக நினைக்கின்றனர்.

இஸ்லாத்தை பாதுகாப்பதற்காக இவர்கள் பெரிய வேலையை செய்திருக்கின்றார்கள். சில நாட்களுக்கு முன்னர் காவல் துறை ஏற்கனவே அந்த வீட்டை எந்த காரணமுமின்றி சீல் வைத்திருந்தது. சீல் வைப்பதற்கு எந்த நியாயமுமில்லை. அந்த வீட்டில் எவரும் இருக்கவில்லை.

ஆயினும் அவர்கள், சீல் இடப்பட்ட அந்த வீட்டை முறையான ஏற்பாட்டுடன் தாக்குதல் நடத்தி அதற்கு சேதத்தை ஏற்படுத்தி இருக்கிறார்கள். பாகிஸ்தான் உருவாகுவதற்கு முன்னதாக இன்னும் சொல்லப்போனால், நூறு வருடங்களுக்கு முன்பாக கட்டப்பட்ட பள்ளிவாசலாகும் அது. எனவே அஹ்மதிகள் இன்று இந்த பள்ளிவாசலை கட்டினார்கள்.

எனவே நாங்கள் சென்று அதன் மினாராக்களை இடித்தோம் என்று காரணம் கூறுவதற்கு கூட அவர்களுக்கு எந்த முகாந்திரமும் இல்லை. ஆக, எதிர்ப்பில் முன்னேறியுள்ள இவர்களின் நிலை இதுவேயாகும். நாங்கள் இன்னும் பல பள்ளிவாசல்களுக்கு சேதத்தை ஏற்படுத்தி இடிப்போம் என்று அறிவிப்பு செய்தார்கள். இன்றும் செய்து வருகின்றார்கள். ஒரு அரசியல் கட்சியை சார்ந்த ஹாபிழ்களாகவும், காரிகளாகவும் இவர்கள் இருக்கின்றனர்.

ஹாபிழ்கள் என்று அழைக்கப்பட்டாலும் கூட அவர்களிடம் திருக்குர்ஆனின் போதனையின் ஆன்மா முற்றிலும் இல்லை. அவர்கள் இப்படி வெறுமையானவர்களாக இருப்பது அவசியமானதும் ஆகும். ஏனெனில் அவர்கள் அல்லாஹ்வால் அனுப்பப்பட்ட காத்தமுல் குலஃபா மற்றும் இக்காலத்தின் நீதி தீர்ப்பவரின் பகைமையில் முன்னேறி இருக்கின்றனர். அதனால் அவர்கள் திருக்குர்ஆனின் ஞானத்திலிருந்து வெறுமையானவர்களாக இருக்கின்றார்கள். திருக்குர்ஆன் வசனங்களை வெளிப்படையில் மனனம் செய்திருக்கின்றார்கள். ஆனால் திருக்குர்ஆனின் போதனைகளை புரிவதிலிருந்து அவர்களின் மூளை மலுங்கடிக்கப்பட்டுள்ளது.

இது கூட இவர்களுக்கு அல்லாஹ்வால் வழங்கப்பட்ட ஒரு தண்டனையாகும். இவர்களால் ஒருபோதும் அதனை புரிய முடியாது. ஆயினும் குழப்பம் மற்றும் சீர்கேட்டில் அவர்களின் மூளை அதில் மிக சுறுசுறுப்பாக உள்ளது. விரும்பிய அளவிற்கு இவர்களைக் கொண்டு குழப்பங்களையும் சீர்கேடுகளையும் ஏற்படுத்திக் கொள்ளலாம். அதற்காக புதிய புதிய வழிகளை இவர்கள் கண்டு பிடித்துள்ளார்கள். நம்மால் ஒருபோதும் இந்த விஷயங்களில் அவர்களுடன் போட்டி போட முடியாது.

ஆக, எப்படி இருப்பினும் இது இவர்களது நிலையாகும். தமது பள்ளிவாசல்களிலும் இவர்கள் ஒருவருக்கொருவர் எதிராக பேசுகின்றனர். குழப்பம் மற்றும் சதித்திட்டங்கள் தீட்டி தமது பள்ளிவாசல்களின் புனிதத் தன்மையையும் சீர்கெடுக்கின்றனர். மேலும் அல்லாஹ்வை வணங்குவதற்காக மட்டுமே கட்டப்பட்ட நமது பள்ளிவாசல்களையும் அடைத்து சீல் செய்து பின்னர் அதற்கு சேதத்தை ஏற்படுத்தி அதன் புனிதத் தன்மையையும் சீர் கெடுக்கின்றனர்.

இவை அனைத்தும் மார்க்கத்தை விட தமது சுய நலன்களுக்கு இவர்கள் கொடுக்கும் முன்னுரிமையின் விளைவாகும். இவர்கள் ஹஸ்ரத நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது முன்னறிவிப்பிற்கேற்ப நிலைபெற்றுள்ள கிலாஃபத்தை ஏற்றுக் கொள்ளாதவரை இதுபோன்ற செயல்களை செய்து கொண்டே இருப்பார்கள்.

மேலும் இவர்கள் மீது எவ்வகையான நன்மைக்கான எதிர்பார்ப்பையும் நம்மால் வைக்க முடியாது. ஆயினும் அவர்களில் ஒரு சில கண்ணியமிக்கவர்களும் இருக்கின்றார்கள்.

செனட்டில் ஒரு பெண்மணி மிக தைரியத்துடன் தமது கவலையை வெளிப்படுத்தினார். மேலும் அந்த செயலை கண்டித்தார். மவ்லவிமார்களும், சுயநலம் படைத்த அரசியல் வாதிகளும் அந்த பெண்மணியை என்ன செய்கின்றார்கள் என்று இனி பாருங்கள். இது போன்ற கண்ணியமிக்க நபர்களை எந்த அளவிற்கு அவர்கள் பின் தொடர்கின்றார்கள் என்றால் ஒன்று அவர்களுக்கு அரசியலிருந்தே விலகுகின்ற நிலை ஏற்படுகின்றது. அல்லது மன்னிப்பு கேட்க நேரிடுகின்றது. இதுவே இதுவரை நாம் கண்ட காட்சிகளாகும்.

நமது உணர்வுகளைப் பொருத்தவரை எதிரிகள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஒரு நினைவுச் சின்னத்தை சேதப்படுத்தியுள்ளனர். எப்போதும் போன்றே நாம் إِنَّمَا أَشْكُوا بَثِّي وَحُزْنِي إِلَى اللَّهِ என்றே பதில் கூறுவோம். இதுவே பதிலாகவும் இருக்க வேண்டும். அதாவது நான் எனது துன்பத்தையும், முறையீட்டையும் அல்லாஹ்வின் முன்பே வைக்கின்றேன்.

நிச்சயமாக அந்த இடத்துடன் நமக்கு உணர்வுப்பூர்வமான தொடர்பு இருக்கின்றது. ஆயினும், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடனான உன்னத தொடர்பின் வெளிப்பாடு என்பது வெறும் கட்டடங்களை பாதுகாப்பதன் மூலமாக மட்டுமல்ல.

மாறாக, அன்னாரின் போதனைகளின்படி செயல்படுவதன் மூலம் ஆகும். அன்னாருக்குப் பிறகு கிலாஃபத் அமைப்புடன் இணைந்திருப்பதன் மூலம் ஆகும். மேலும் கிலாஃபத்தின் அருள்களிலிருந்து பயன் பெறுவதற்கு இறைவன் கூறிய விஷயங்களை பெற்றுக் கொள்வதன் மூலம் ஆகும். தமது இறைவணக்கத்தின் தரத்தை உயர்த்திக் கொள்வதன் மூலம் ஆகும். அல்லாஹ்வின் கட்டளையின்படி அமல் செய்வதன் மூலம் ஆகும். தனது கட்டுப்படுதலின் தரத்தை உயர்த்துவதன் மூலம் ஆகும். எனவே இதற்காக நாம் முயற்சி செய்ய வேண்டும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம், கலீஃபாக்களின் வருகையின் நோக்கம் என்ன? என்று ஒருவர் கேள்வி கேட்டார். அதற்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் வழங்கிய பதில் நம்முன் எப்போதும் இருக்க வேண்டும். சீர்திருத்தம் என்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பதிலளித்தார்கள். இதுவே நோக்கமாகும். பின்னர் அதனை அன்னார் விளக்கியும் உள்ளார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்.

ஹஸ்ரத் ஆதம் மூலமாக இந்த மனித இனத்தின் சந்ததி ஆரம்பமானது. ஒரு நீண்ட காலத்திற்குப் பிறகு மனிதனின் செயல் நிலைகள் பலவீனமாகிவிட்ட போது, மனித வாழ்க்கையின் அசல் நோக்கத்திலிருந்தும், இறை வேதத்தின் அசல் நோக்கத்திலிருந்தும் மக்கள் மிக தொலைவில் சென்று விட்ட போதும், நேர்வழியிலிருந்து விலகிச் சென்று விட்ட போதும் இறைவன் தனது அருளால் தனது ஒரு தூதரின் மூலமாக உலகத்திற்கு நேர்வழி காட்டினான்.

மேலும் உலகை வழிகேட்டின் கிடங்கிலிருந்து வெளியேற்றினான். இறைவனின் கம்பீரமிக்க பண்பு வெளிப்பட்டது. ஒரு ஒளி விளக்கைப் போன்று உலகில் மீண்டும் இறைஞானத்தின் ஒளி நிலைநாட்டப்பட்டது. ஈமான் ஒளிமிக்க ஈமானாக மாற்றி அமைக்கப்பட்டது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

சுருக்கமாக, எப்போதும் இந்த நடைமுறையே தொடர்ந்து வருகின்றது. ஹஸ்ரத் ஆதம் (அலை) அவர்கள் முதல் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வரை இதையே நாம் கண்டு வந்துள்ளோம். எனவே எப்போதும் அல்லாஹ்வின் நடைமுறை இவ்வாறே இருந்து வந்துள்ளது. ஒரு காலகட்டத்திற்குப் பிறகு முந்தைய நபியின் போதனைகளை மறந்து மக்கள் நேர்வழியிலிருந்து விலகி ஈமான் எனும் செல்வத்தையும், இறைஞானத்தையும் இழந்து நிற்கும் போதும் உலகில் வழிகேடு மற்றும் தீமைகளும், அசுத்தங்களும், அபாயகரமான இருள்களும் சூழ்ந்து விடும் போது அல்லாஹ்வின் பண்பு பொங்கி எழுகின்றது.

மேலும் ஒரு மகத்துவமிக்க மனிதரின் மூலமாக இறைவனின் பெயரும் மற்றும் ஏகத்துவமும், நல்லொழுக்கமும் மீண்டும் நிலைநாட்டப்பட்டு, இறைஞானம் பெறப்பட்டு இறை இருப்பிற்கான ஆயிரக்கணக்கான அடையாளங்கள் வெளிப்படுத்தப்படுகின்றன. மேலும் தொலைந்து போன இறைஞானமும், இறையச்சமும், தூய்மையும் மீண்டும் உலகில் நிலைநாட்டப்படுகின்றது.

எனவே இன்று முஸ்லிம்களிடமும் ஈமானும் இறையச்சமும் தொலைந்து போய் இருக்கின்றது. முஸ்லிம் அல்லாதவர்களிடமும் அது தொலைந்து போய் இருக்கின்றது. எனவே இக்காலத்தில் அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பிற்கேற்க காத்தமுல் குலஃபாவை அனுப்பி இருக்கின்றான். மேலும் அன்னார் தோன்றி இவ்விஷயங்களை நிலைநாட்டியுள்ளார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஒரு மகத்துவமிக்க புரட்சி உலகில் ஏற்படுகின்றது. சுருக்கமாக, இறைவனின் இதே தொன்றுதொட்ட நடைமுறைக்கேற்ப எனது இந்த ஜமாஅத்தும் நிலைநாட்டப்பட்டுள்ளது.

(மல்ஃபூஸாத் தொகுதி 10 பக்கம் 274–275. 1985 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

எனவே அஹ்மதிய்யா ஜமாஅத் இறை இருப்பிற்கான தெளிவான சான்றுகளை வழங்குவதற்காகவே நிலைநாட்டப்பட்டுள்ளது. ஏகத்தவத்தை மீண்டும் நிலைநாட்ட வேண்டும். நல்லொழுக்கங்களை மீண்டும் புத்தம் புதிதாக நிலைநாட்ட வேண்டும். நாம் பார்த்து வருவது போன்று முஸ்லிம்களின் பெரும்பான்மையின் செயல் நிலைகள் மிக பலவீனமானதாக உள்ளது.

கபர்களை வணங்குவதிலும், இணை வைத்தல் செய்வதிலும், சடங்கு சம்பிரதாயங்களிலும் இவர்கள் மூழ்கி இருக்கின்றனர். தீமைகளும், அசுத்தங்களும் பரவி கிடக்கின்றன. இதனை அவர்களே ஒப்புக் கொள்ளவும் செய்கின்றனர்.

இதுபற்றி பத்திரிகைகளில் கட்டுரைகள் எழுதப்படுகின்றன. ஆயினும் நான் கூறியது போன்று அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது அடிமைத்துவத்தில் எவரை நேர்வழி வழங்குவதற்கும், வழிகேட்டின் குழிகளிலிருந்து மக்களை வெளியேற்றுவதற்காகவும் அனுப்பியுள்ளானோ அவரை ஏற்பதற்கு இவர்கள் தயாரில்லை. மறைமுகமான இணை வைத்தல்களில் இவர்கள் மூழ்கி இருக்கின்றனர். நல்லொழுக்கம் என்பது இவர்களிடம் பெயரளவில் கூட இல்லை. ஆனால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கடைசி வரி நான் கூறியது போன்று எப்போதும் நம் நினைவில் இருக்க வேண்டும். அதாவது, இறைவனின் தொன்றுதொட்ட நடைமுறைக்கேற்ப எனது இந்த ஜமாஅத் நிலைநாட்டப்பட்டுள்ளது என்பது அந்த வழியாகும்.

உலகில் எல்லா பக்கமும் தீமைகளும், அசுத்தங்களும் பரவி விடுகின்ற போது நல்லொழுக்கங்கள் இல்லாமல் ஆகிவிடும் போது, மக்கள் ஏகத்துவத்தை மறந்து விடுகின்ற போது அல்லாஹ் தனது ஒரு அன்பிற்குரியவரை அனுப்புகின்றான். அவரின் மூலமாக மார்க்கம் சீர்படுத்தப்படுகின்றது.

எனவே நாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டு நம்மிடத்தில் இந்த மாறுதல்களை ஏற்படுத்தவில்லை என்றால் பின்னர் அது மிகவும் கவலைக்குரிய விஷயமாகும். நாம் எப்போதும் நம்மை நாமே ஆய்வு செய்து கொண்டிருக்க வேண்டும்.

அல்லாஹ் கிலாஃபத்துடன் தொடர்புடைய அருள்களை பெற்றுக் கொள்வதற்கு எந்த விஷயங்கள் மற்றும் பணிகளை செய்ய கட்டளையிட்டிருக்கின்றானோ நாம் அதற்கேற்ப நமது வாழ்க்கையை ஆக்கிக் கொள்வதற்கு முயற்சி செய்கின்றோமா? இல்லையா? என்றும் நாம் ஆய்வு செய்ய வேண்டும்.

நமது தரம் என்ன? என்பதையும் பார்க்க வேண்டும். நமது இறைவணக்கங்கள் எப்படி இருக்கின்றன? நமது தொழுகைகள் எப்படி இருக்கின்றன? நமது ஒவ்வொரு சொல்லும் செயலும் இணை வைத்தலிருந்து தூய்மையானதாக இருக்கின்றதா? இல்லையா? நமது பொருளாதார தியாகத்தின் தரம் என்ன? நமது கட்டுப்படுதலின் தரம் என்ன? அல்லாஹ் மற்றும் அவனது தூதர் (ஸல்) அவர்கள் எப்படி விரும்புகின்றார்களோ அப்படிப்பட்ட தரத்தை நாம் பெறக்கூடியவர்களாக இருக்கின்றோமா? இல்லையா? அடுத்து, இக்காலத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எந்த தரத்தில் தனது ஜமாஅத்தைச் சார்ந்தவர்களை பார்க்க விரும்புகின்றார்களோ நாம் அந்த தரத்தை அடைவதற்கு முயற்சி செய்கின்றோமா? இல்லையா? என்று நாம் நம்மை நாமே ஆய்வு செய்ய வேண்டும்.

இறைவணக்கங்கள் மற்றும் தொழுகையின் முக்கியத்துவம் தொடர்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது ஓர் வழிகாட்டல் உள்ளது. ஹதீஸில் வருகின்றது. ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

கியாமத் நாளன்று முதன் முதலில் மனிதர்களிடம் தொழுகை தொடர்பான கேள்வி கணக்கே கேட்கப்படும். இந்த கணக்கு சரியானதாக இருந்தால் பின்னர் அந்த மனிதர் வெற்றியடைந்து விடுவார். அவர் இரட்சிப்பை பெற்று விடுவார். இதே கணக்கு தவறாக இருக்குமென்றால் பின்னர் அந்த நபர் தோல்வியடைந்து விடுவார். மேலும் நஷ்டத்தில் இருப்பார். அவருடைய ஃபர்ழ்களில் குறைவு ஏதும் இருக்குமென்றால் அல்லாஹ் கூறுவான். எனது அடியார்களுடைய சில நவாஃபில்களும் இருக்கின்றன. இவ்வாறு நவாஃபில்கள் இருக்குமென்றால் ஃபர்ழ்களில் ஏற்பட்ட குறைபாடு அந்த நவாஃபில்கள் மூலம் நிறைவு செய்யப்படும். இதே போன்ற மனிதனின் ஏனைய செயல்களின் ஆய்வும் நடைபெறும்.

(சுனன் திர்மதி, கிதாபுஸ் ஸலாத், ஹதீஸ் எண் 413)

இதுவே தொழுகையின் முக்கியத்துவம் ஆகும். இன்றைய நாட்களில் ரமலானின் காரணமாக எல்லோருக்கும் தொழுகையின் பக்கமும், பள்ளிவாசலின் பக்கமும் அதிக கவனம் உள்ளது. இது ரமலானில் மட்டும் போதுமானதல்ல. அல்லாஹ் ரமலானின் தொழுகைகளை மட்டும் கணக்கெடுப்பதில்லை. மாறாக, முழு வாழ்நாளின் தொழுகை கணக்கையும் கேட்பான்.

எனவே இது மிகவும் அச்சப்பட வேண்டிய இடமாகும். அல்லாஹ் தனது அடியாரின் மீது எல்லையற்ற கருணையும் அருளும் செய்துள்ளான்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஃபர்ழ்களில் மனித பலவீனத்தால் ஏற்படும் குறைவை நவாஃபில்கள் மூலம் இறைவன் முழுமை செய்கின்றான். மனித இயல்பில் ஏற்றமும் இறக்கமும் வரத்தான் செய்யும். சில முறை மனிதனால் உரிமைகளை நிறைவேற்ற முடியாமல் போய் விடுகின்றது. அந்நிலைகளில் அல்லாஹ் கூறுகின்றான். நஃபில்களின் மூலமாக ஃபர்ழ்களில் ஏற்பட்ட குறைபாடுகளை நீக்குவதற்கு நீங்கள் முயற்சி செய்யுங்கள்.

அடுத்து இன்னொரு அறிவிப்பில் வருகின்றது. ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறுவதைக் கேட்டேன். தொழுகைகளை விட்டு விடுவது என்பது மனிதனை இணை வைத்தல் மற்றும் நிராகரிப்பிற்கு அருகில் கொண்டு சென்று விடுகின்றது.

(சஹீஹ் முஸ்லிம், கிதாபுல் ஈமான் ஹதீஸ் எண் 246)

எனவே இது மிகவும் அச்சப்படவேண்டிய இடமாகும். இணை வைத்தல் எப்படிப்பட்ட குற்றம் என்றால் அதனை அல்லாஹ் மிகவும் வெறுக்கின்றான். இணை வைத்தலை இறைவன் மன்னிப்பதும் இல்லை. நாம் இதுபோன்ற குற்றங்களை செய்து கொண்டு அல்லாஹ்வின் அருட்கொடையான கிலாஃபத்திலிருந்து பயன்பெற முடியுமா? ஒருபோதும் முடியாது.

தொழுகை எப்படி இருக்க வேண்டும்? அதன் உண்மைத்துவம் மற்றும் அதன் ஆன்மா என்ன? என்பதை விளக்கியவாறு ஹஸ்ரத்

வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்.

சிலர் பள்ளிவாசலுக்கும் செல்கின்றனர். தொழவும் செய்கின்றனர். இஸ்லாத்தின் ஏனைய கடமைகளையும் நிறைவேற்றுகின்றனர். ஆயினும் இறையுதவி அவர்களுக்கு கிடைப்பதில்லை. அவர்களின் நல்லொழுக்கம் மற்றும் பழக்க வழக்கங்களில் பெரிய மாறுதல்கள் எதுவும் தென்படுவதும் இல்லை. தொழக் கூடியவர்களின் நல்லொழுக்கங்கள் மற்றும் பழக்க வழக்கங்களில் தெள்ளத் தெளிவான மாறுதல்கள் தென்பட வேண்டும். அவ்வாறு தென்படாத நிலையில் அவர்களின் இறைவணக்கங்கள் வெறும் சடங்கு சம்பிரதாயமான இறைவணக்கங்கள் என்று தெரிய வருகின்றது. அதில் எந்த உண்மைத்துவமும் இருப்பதில்லை. ஏனென்றால் இறைகட்டளைகளை செயல்படுத்துவது என்பது ஒரு விதையைப் போன்றதாகும். அதன் தாக்கம் உடல் மற்றும் ஆன்மா இரண்டின் மீதும் ஏற்படுகின்றது.

விதை இருக்கின்றதென்றால் அதன் தாக்கம் ஆன்மாவின் மீதும் ஏற்பட வேண்டும். உதாரணமாக, ஒரு செடியை நட்டினால் செடி வளர்கின்றது. அது எல்லோருக்கும் தென்படுகின்றது. அதே போன்று நமது ஆன்மாவின் மீதும் நமது உடலின் மீதும் நமது நல்லொழுக்கங்கள் மற்றும் பழக்க வழக்கங்கள் மீதும் தொழுகைகளின் தாக்கம் தென்பட வேண்டும். நிலத்தை உழுகின்ற ஒருவர் இருக்கின்றார். மிக உழைப்புடன் விதையை விதைக்கின்றார். இரண்டு மூன்று மாதங்கள் வரை அதில் செடி எதுவும் வளரவில்லை என்றால் பின்னர் விதை சீர்கெட்டது என தெரிய வருகின்றது.

இதே நிலை தான் இறைவணக்கத்தின் நிலையும் ஆகும். ஒரு நபர் இறைவனை வஹ்தஹூ லா ஷரீக்காக அதாவது இறைவனை ஏகனும், இணையற்றவனுமாக கருதுகின்றார் என்றால் தொழுகின்றார் என்றால், நோன்பு நோற்கின்றார் என்றால், வெளிப்படையாக இறை கட்டளைகளை முடிந்த வரை செயல்படுத்துகின்றார் என்றால் அதன் பின்னரும் இறைவன் புறமிருந்து அவருக்கு ஆதரவாக உதவிகள் வெளிப்படவில்லை என்றால் அவர் விதைத்த விதை சீர்கெட்டதாகும் என்பதை ஒப்புக் கொள்ள நேரிடும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 10 பக்கம் 43 – 1985 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

எனவே இந்த நுட்பமான கருத்தை நாம் நம்முன் நிறுத்த வேண்டும். அதாவது தமது நல்லொழுக்கம் மற்றும் பழக்க வழக்கங்களின் தரத்தை உயர்த்துவதன் மூலம் இறை தொடர்பின் நெருக்கத்தை கண்டு கொள்ள முடியும். அவை சிறப்பானதாக இருந்தால் தொழுகை பயனளிக்கின்றது மற்றும் நாம் அல்லாஹ்வை நெருங்கி வருகின்றோம் என்று பொருள் படும். வெளிப்படையான நமது நிலை மாறவில்லை என்றால் பின்னர் அல்லாஹ்வின் நெருக்கமும் கிடைக்கவில்லை; தொழுகையும் எந்த பயனும் அளிக்கவில்லை என்றே பொருள்படும்.

அடுத்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தொழுகை என்பது என்ன? என்பதை விளக்கியவாறு கூறுகின்றார்கள்:

தொழுகை என்பது துஆ ஆகும். தஸ்பீஹ், தஹ்மீது மற்றும் இஸ்திஃபார், ஸலவாத் ஓதுவது மற்றும் உருக்கத்துடன் செய்யப்படுகின்ற துஆ ஆகும். நீங்கள் தொழுகின்ற போது கவனமற்றவர்களைப் போன்று உங்களது துஆக்களில் அரபி சொற்களை மட்டும் பேணி வராதீர்கள். அதாவது அரபி மொழி உங்களது மொழி அல்ல. எவர்கள் அரபி மொழி அறியாதவர்களாக இருக்கின்றார்களோ அவர்கள் அதனை பேணுவதில் மட்டுமே குறியாக இருக்கக்கூடாது. ஏனென்றால் இந்த வழிமுறையின் மூலம் துஆ செய்யக்கூடிய நபரின் உள்ளத்தில் இருக்க வேண்டிய உருக்கம் ஏற்படுவதில்லை.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

அவர்களின் துஆக்களும், பாவமன்னிப்பு கோருதலும் சடங்கு சம்பிரதாயமானவைகளாகும். அதில் எந்த உண்மைத்துவமும் இருப்பதில்லை. ஆனால் நீங்கள் தொழுகின்ற போது இறைவனின் வேதமாகிய திருக்குர்ஆனை மட்டுமல்லாமல் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஏனைய துஆக்களையும் செய்தல் வேண்டும். அதன் பொருளையும் மனனம் செய்து கொள்ள வேண்டும். அப்போது தான் அதன் ஆன்மாவை நம்மால் புரிந்து கொள்ள முடியும். இது மட்டுமல்லாமல் சிலர் ஏனைய பல்வேறு துஆக்களையும் மனனம் செய்து கொள்கின்றனர்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

பொதுவாக உங்களின் மொழியிலேயே துஆக்களை உருக்கத்துடன் செய்தலும் வேண்டும். அப்போது தான் உங்களது உள்ளத்தில் உருக்கமும், பணிவும் ஏற்படும்.

(கிஷ்தி நூஹ், ரூஹானி கஸாயின் தொகுதி 19 பக்கம் 68,69)

தொழுகை எப்படிப்பட்ட விஷயம் என்றால் அதன் மூலம் வானம் மனிதனின் பக்கம் குனிந்து விடுகின்றது. அதாவது அல்லாஹ் மனிதனுக்கு அருகில் வந்து விடுகின்றான். தொழுகைக்குரிய உரிமையை வழங்கக்கூடியவர் தான் மரணித்து விட்டதைப் போன்று எண்ணுகின்றார். அவரது ஆன்மா உருகி அல்லாஹ்வின் சன்னிதானத்தில் விழுந்து விடுகின்றது. எந்த வீட்டில் இதுபோன்ற தொழுகை நடைபெறுமோ அந்த வீடு ஒருபோதும் அழிவிற்குள்ளாகாது.

ஹதீஸில் வந்துள்ளது. நூஹின் காலத்தில் இதுபோன்ற தொழுகை நடந்திருந்தால் அந்த சமுதாயம் ஒருபோதும் அழிந்திருக்காது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஹஜ்ஜும் கூட மனிதனுக்கு நிபந்தனைக்குட்பட்டதாகும். சில நிபந்தனைகளின் அடிப்படையிலேயே ஹஜ் செய்யப்படுகின்றது. ஹஜ் செய்வது அனைவர் மீதும் கடமையல்ல. நோன்பும் நிபந்தனைக்குட்பட்டதாகும்.

அது நோயாளிகளுக்கும், பயணிகளுக்கும் கடமையாக்கப்படவில்லை. பயணிகள் பின்னர் அந்த நோன்பை வைக்கலாம். ஆனால் சில நோயாளிகள் நிரந்தரமாகக் கூட நோன்பு நோற்க முடியாது. ஆக, நோன்பும் கூட நிபந்தனைக்குட்பட்டதாகும்.

அடுத்து ஸக்காத்தும் கூட நிபந்தனைக்கு உட்பட்டதாகும். எவரிடத்தில் செல்வம் இருக்குமோ அவர்களுக்கே ஸக்காத் கடமையாகும். ஆனால் தொழுகை நிபந்தனைக்குட்பட்டதல்ல. கடமையாக்கப்பட்ட மற்ற அனைத்தும் வருடத்தில் ஒருமுறை மட்டுமே நிறைவேற்ற வேண்டியதாகும். ஆனால் தொழுகை ஒரு நாளில் ஐந்து முறை நிறைவேற்றப்பட வேண்டும். எனவே தொழுகையினை முழுமையாக நிறைவேற்றாதவரை அதனால் கிடைக்கக்கூடிய அருள்களை பெற முடியாது. அந்நிலையில் இந்த பைஅத்தின் அருட்களையும் பெற முடியாது.

(மல்ஃபூஸாத் தொகுதி 6 பக்கம் 422 – 1985 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

தொழுகையை முழுமையாக நிறைவேற்றாத வரை நீங்கள் என்னிடம் செய்த பைஅத்தும் பயனளிக்காது. எனவே இந்த உயர் தரத்தை அடைவதற்காக நாம் எப்போதும் முயற்சி செய்ய வேண்டும்.

அடுத்து அல்லாஹ் கூறுகின்றான்: இணை வைத்தலிலிருந்து தப்பித்துக் கொள்ளுங்கள்.

இது தொடர்பாக ஓர் அறிவிப்பில் வருகின்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு தனது சமுதாயம் இணை வைத்தலுக்கு ஆளாகி விடக்கூடாதே? என்ற கவலை இருந்தது.

ஒரு ஹதீஸில் வருகின்றது. இபாதா பின் நஸீஹ், ஷத்தாத் பின் அவ்ஸ் அவர்களைப் பற்றி கூறுகின்றார்கள். அன்னார் அழுது கொண்டிருந்தார்கள். அவர்களிடத்தில் ஏன் அழுகின்றீர்கள்? என்று கேட்கப்பட்டது. அதற்கு அவர்கள் கூறினார்கள். நான் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து செவியுற்ற ஒரு விஷயம் எனக்கு நினைவு வந்து விட்டது. அதை எண்ணி நான் அழத் தொடங்கி விட்டேன்.

நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறக் கேட்டேன். அன்னார் கூறினார்கள். நான் எனது சமுதாயம் தொடர்பாக இணை வைத்தல் மற்றும் மறைமுகமான ஆசைகள் என்ற இரண்டு காரியங்கள் குறித்து அஞ்சுகின்றேன்.

அறிவிப்பாளர் கூறுகின்றார். அல்லாஹ்வின் தூதர் அவர்களே! உங்களுடைய சமுதாயம் உங்களுக்குப் பிறகு இணை வைத்ததில் ஈடுபட்டு விடுமா? என நான் கூறினேன். அதற்கு அன்னார், ஆம்! என்று கூறினார்கள். நிச்சயமாக எனது சமுதாயம் சூரியனையும், சந்திரனையும், சிலைகளையும், கற்களையும் வணங்காது. எனினும் தனது செயல்களில் பகட்டை வெளிப்படுத்தும். அவர்களின் செயல்களில் ஏமாற்றுதல் இருக்கும். பகட்டு இருக்கும்.

மேலும் மறைமுகமான ஆசைகளில் மூழ்கிவிடும். அவர்களில் ஒருவர் நோன்பாளியாக காலைப்பொழுதை கடக்கின்ற போது பின்னர் அவருக்கு ஏதாவது ஆசை வந்தால் அதன் காரணமாக நோன்பை விட்டு விடுவார். நோன்பை

விட்டு விட்டு அந்த ஆசையை நிறைவேற்றிக் கொள்வார்.

(முஸ்னத் அஹ்மது பின் ஹம்பல் தொகுதி 5 பக்கம் 835 ஹதீஸ் எண் 17250 – 1998 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள ஆலிமுல் குதுபில் அச்சிடப்பட்டது)

நோன்பை பொருட்படுத்தமாட்டார். வெளிப்படையான பகட்டான நோன்பாகவே அது இருக்கும்.

நான் கடந்த முறை ஒரு சம்பவத்தை கூறியிருந்தேன். அம்மா, அப்பாவிற்காக மட்டும் சில இளைஞர்கள் நோன்பு நோற்கின்றார்கள். மதிய வேளையில் கடை வீதிக்குச் சென்று உணவு உண்கின்றனர். பின்னர் மாலைப்பொழுதில் வீட்டில் மிக ஒழுக்கமாக குடும்பத்தினருடன் அமர்ந்து தாங்களே பெரிய நோன்பாளிகள் போன்று மற்றவர்களுடன் சேர்ந்து நோன்பு திறக்கின்றனர். இதுவே சிலரின் நிலையாக உள்ளது. இங்குள்ள ஒரு செய்தித்தாளும் கூட கட்டுரை ஒன்றை வெளியிட்டிருந்தது. நான் கடந்த வாரம் அதை கூறியிருந்தேன்.

எனவே இது மிக அச்சத்திற்குரிய இடமாகும். நாம் மிக ஆழமாக நம்மை ஆய்வு செய்து பார்த்தால் மறைமுகமான இணை வைத்தலுக்கு சில உதாரணங்கள் தெரிய வரும். நமது தொழுகையும் கூட சில நேரங்களில் இச்சைகளின் காரணமாக கைவிடப்படுகின்றன. நமது நோன்பும் உலகியல் காரணங்களுக்காக கைவிடப்படுகின்றன.

ஒரு சிந்தி இளைஞர் நேற்று என்னைச் சந்தித்தார். அவர் என்னிடம், பீஸா விற்று வருகின்றேன். எனவே அதை எனக்கு சுவைத்து பார்க்க வேண்டிய நிலை உள்ளது. அதனால் என்னால் நோன்பு நோற்க முடியவில்லை. அல்லது அதனால் நான் சில நோன்புகளை விட்டு விடுகின்றேன் என்று என்னிடம் கூறினார். இதைக் கேட்டு விட்டு இன்னா லில்லாஹ் என்று கூறுவதைத் தவிர வேறு வழியில்லை.

நாம் அஹ்மதியாக இருந்தும் கூட இதுபோன்ற செயல்கள் செய்வது வேதனை தருகின்றது. அவருடைய இந்த விஷயத்தைக் கேட்டு அவருக்கு ஏதாவது உணர்வு ஏற்பட்டதா? இல்லையா? என்பது எனக்குத் தெரியாது. ஆயினும் இதுபோன்ற சிலரின் பேச்சுகளைக் கேட்டு நிச்சயமாக எனக்கு வெட்கம் ஏற்படுகின்றது.

அல்லாஹ்வின் அருளை பெறுவதற்கான வாதம் செய்யப்படுகின்றது. ஆனால் அவனது கட்டளைகளிலிருந்து மக்கள் விலகி நிற்கின்றனர். இந்த நிலை இருக்குமென்றால், பின்னர் வாதமும் பொய்யானதாகும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

இறைவன் திருக்குர்ஆனில் கூறுகின்றான். وَيَغْفِرُ مَادُوْنَ ذٰلِكَ அதாவது எல்லா பாவங்களையும் இறைவன் மன்னித்து விடுவான். ஆனால் இணை வைத்தலை இறைவன் மன்னிக்க மாட்டான். எனவே இணை வைத்தலின் பக்கமே நெருங்காதீர்கள். அதனை தடுக்கப்பட்ட மரமாக கருதுங்கள்.

(தொஹ்ஃபா கோல்டவியா, ரூஹானி கஸாயின் தொகுதி 17 பக்கம் 323,324 அடிக்குறிப்பு)

இங்கு ஷிர்க்கைப் பற்றி கூறப்பட்டுள்ளது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

தவ்ஹீது என்பதன் பொருள் வெறும் வாயினால் லா இலாஹ இல்லல்லாஹ் என்று கூறிவிட்டு உள்ளத்தில் ஆயிரக்கணக்கான சிலைகளை உருவாக்கிக் கொள்வதல்ல. மாறாக, எந்த நபர் தனது ஒரு பணிக்கு தனது திட்டத்திற்கு இறைவனுக்குரிய மகத்துவம் வழங்குகின்றாரோ அல்லது ஒரு மனிதனின் மீது இறைவன் மீது வைக்க வேண்டிய நம்பிக்கையை வைக்கின்றாரோ அல்லது இறைவனுக்கு கொடுக்க வேண்டிய அளவுக்கு மகத்துவத்தை தனது நஃப்ஸிற்கு கொடுக்கின்றாரோ இந்த எல்லா நிலையிலும் அல்லாஹ்வின் பார்வையில் அவர் சிலை வணங்கி ஆவார். அந்த ஹதீஸின் விளக்கம் இதுவே ஆகும்.

தங்கம், வெள்ளி, பித்தலை மற்றும் கற்களால் செய்யப்படுகின்ற சிலைகள் மட்டும் சிலையல்ல. மாறாக, இறைவனுக்குரிய மகிமை கொடுக்கப்படக்கூடிய ஒவ்வொரு விஷயமும் அல்லது கூற்றும் அல்லது செயலும் இறைவனின் பார்வையில் சிலையாகும்.

(சீராஜுத்தீன் ஈஸாயி கே சார் சவாலூன் கா ஜவாப், ரூஹானி கஸாயின் தொகுதி 12 பக்கம் 349)

எனவே மிக நுட்பமாக நாம் நம்மை ஆய்வு செய்ய வேண்டிய அவசியம் இருக்கின்றது.

அடுத்து கிலாஃபத்திலிருந்து அருள் பெறக்கூடியவர்களுக்கு ஸக்காத் கொடுப்பது மற்றும் பொருள் தியாகம் செய்வது அவசியமாக்கப்பட்டுள்ளது.

ஹதீஸில் வருகின்றது. ஹஸ்ரத் இப்னு மஸ்ஊத் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

இரு நபர்களைத் தவிர வேறு எவர் மீதும் பொறாமைக் கொள்வது ஆகுமானதல்ல. அவர்களில் ஒருவர், அல்லாஹ் தமக்கு வழங்கிய செல்வத்தை இறை வழியில் செலவிடுபவர் ஆவார். இரண்டாம் நபர் யாரென்றால், இறைவன் அவருக்கு வழங்கிய ஞானம் மற்றும் அறிவின் அடிப்படையில் மக்கள் மத்தியில் தீர்ப்பு வழங்கி மக்களுக்கு அதனை கற்றுக் கொடுப்பவர் ஆவார்.

(சஹீஹ் புகாரி, கிதாபுல் இல்ம் ஹதீஸ் எண் 73)

அடுத்து ஹஸ்ரத் ஹஸன் அவர்கள் கூறுகின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

நீங்கள் உங்கள் செல்வத்திற்கு ஸக்காத் கொடுத்து பாதுகாத்துக் கொள்ளுங்கள். மேலும் உங்களது நோய்களுக்கு தான தர்மங்கள் செய்வதன் மூலம் சிகிச்சை செய்து கொள்ளுங்கள்.

(அல் ஜாமிவுஷ் ஷுஅபுல் ஈமான் தொகுதி 5 பக்கம் 185 ஹதீஹ் எண் 3280)

அதாவது ஸக்காத் மற்றும் சதகாவின் பக்கம் கவனமூட்டப்பட்டுள்ளது. ஸக்காத் எவர் மீது கடமையோ அவர் ஸக்காத் கொடுப்பார்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியது போன்று ஸக்காத் அனைவரின் மீதும் கடமையல்ல. ஆனால் எவருக்கு ஸக்காத் கொடுப்பது கடமையில்லையோ அவருக்கு அன்னார் அறிவுரை வழங்கியுள்ளார்கள். நீங்கள் சதகாவின் பக்கம் கவனம் செலுத்துங்கள். தேவை உடையவர்கள் மற்றும் ஏழைகளை கருத்தில் கொள்ளுங்கள். எனவே இங்கு தேவையுடையவர்களின் தேவையின் பக்கம் கவனமூட்டுவது அவசியமானதாகும். அதன் மூலம் ஒற்றுமையும் ஏற்பட முடியும்.

ஏனென்றால், ஸக்காத் மற்றும் செல்வங்களின் செலவீனங்கள் என்பது கிலாஃபத்தின் கீழ் தான் சிறந்த முறையில் நடைபெற முடியும். ஜமாஅத் அமைப்பும் உள்ளது. அதனிடம் தேவையுடையவர்களின் பட்டியல் சிறந்த முறையில் உள்ளது. இருக்கவும் முடியும். ஜமாஅத்துகள் நன்கு ஆய்வு செய்து அந்த பட்டியலை தயார் செய்ய வேண்டும். பின்னர் காலத்தின் கலீஃபாவிடம் பல்வேறு இடங்களின் தகவல் இருக்கின்றது. பல்வேறு மக்களிடமிருந்து வந்து விடுகின்றது.

சில மக்கள் தங்களைப் பற்றி அனுப்பி விடுகின்றார்கள். சிலர் ஜமாஅத்திற்கு தகவல் கொடுத்து இங்கு அந்த பணத்தை செலவு செய்யுங்கள் என்றும் கூறுகின்றனர். இதன் காரணமாகவே ஆப்ரிக்காவிலும் ஏனைய நாடுகளிலும் எந்த அளவுக்கு முடியுமோ அந்த அளவிற்கு வசதி வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்க ஜமாஅத் முயற்சி செய்கின்றது.

சிகிச்சைக்காகவும் பொருள் உதவி செய்யப்படுகின்றது. கல்விக்காகவும் பொருளுதவி செய்யப்படுகின்றது. உணவு தேவைகளுக்காகவும் கூட பொருளுதவி செய்யப்படுகின்றது. நான் பார்த்திருக்கின்றேன். பெரும்பாலான அஹ்மதிகள் மிகவும் வேதனையுடன் தமது ஏழை சகோதரர்களுக்காக தியாகங்கள் செய்கின்றனர். இதன் மூலம் ஜமாஅத்தில் ஒருமைப்பாடும் உருவாகின்றது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

தொழுகைகளுக்குரிய உரிமைகளை வழங்குவது தொடர்பாகவும், ஸக்காத் கொடுப்பது தொடர்பாகவும் ஒருவருக்கொருவர் இடையிலான தொடர்புகளை இறைவன் பக்கம் தொடர்புபடுத்தியும் அன்னார் கூறுகின்றார்கள். மக்கள் தங்களது தொழுகைகளில் உருக்கத்தையும், பணிவையும் வெளிப்படுத்துகின்றனர். அதன் கண்டிப்பான விளைவு என்னவாக இருக்கின்றதென்றால் அவர்கள் வீணான காரியங்களிலிருந்து விலகி விடுகின்றனர்.

தொழுகைகள் சரி வர நிறைவேற்றப்பட்டால் அவர்கள் வீணானவற்றிலிருந்து விலகி விடுவார்கள். மேலும் தீய உலகிலிருந்து இரட்சிப்பை பெற்று விடுவார்கள். மேலும் உலக நேசம் என்பது தனிந்து அவர்களின் உள்ளங்களில் இறைநேசம் மேலோங்கி விடுகின்றது.

அதன் விளைவு என்னவென்றால், ஹும் லி ஸக்காத்தி ஃபாயிலூன் அதாவது அவர்கள் இறைவழியில் செலவிடுவார்கள். வீணானவற்றிலிருந்து விலகி விடுகின்ற போது, வீணான காரியங்களில் செலவிடாத போது இறை

வணக்கத்தின் மீது கவனம் ஏற்படுகின்றது. பின்னர் அந்நிலையில் அவர் செல்வந்தர் என்றால் அவருக்கு இறைவழியில் செலவிடுவதன் பக்கம் கவனம் ஏற்படுகின்றது. ஆக, இவை அனில் லக்வி முக்ரிலூன் என்பதன் கட்டாய விளைவாகும். அதாவது வீணானவற்றிலிருந்து தப்பித்துக் கொண்டதன் கட்டாய விளைவாகும். அந்நிலையில் பொருள் தியாகத்தின் பக்கம் கவனம் ஏற்படுகின்றது. சக மனிதர்களைப் பற்றிய உணர்வு ஏற்படுகின்றது.

உலக நேசம் தனிந்து விடுகின்ற போது அதன் கட்டாய விளைவாக இறை வழியில் அவர்கள் செலவிடுவார்கள். பெரும் பெரும் கருவூலங்கள் அவர்களிடம் இருந்தாலும் அவர்கள் சற்றும் அதனை பொருட்படுத்த மாட்டார்கள். அதனை இறைவழியில் கொடுப்பதற்கு சற்றும் தயங்க மாட்டார்கள். ஆயிரக்கணக்கான மக்கள் ஸக்காத் கொடுப்பதில்லை.

எந்த அளவுக்கு என்றால் அவர்களின் சமுதாயத்தைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான ஏழைகளும் தேவையுடையவர்களும் மாண்டு விடுகின்றனர். ஆயினும் அவர்கள் அவர்களை பொருட்படுத்துவதும் கூட கிடையாது. ஆனால் இறைவன் புறமிருந்து ஒவ்வொரு பொருளிற்குமான ஸக்காத்தை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

செல்வந்தர்களாகவும், ஜமீன்தார்களாகவும் எந்த மக்கள் இருக்கின்றார்களோ அவர்களுக்குரிய கட்டளை என்னவென்றால் அவர்கள் தங்களது கருவூலங்களை கணக்கிட்டு ஸக்காத் கொடுக்க வேண்டும். ரொக்கம் ஒரு குறிப்பிட்ட அளவில் குறிப்பிட்ட காலகட்டத்திற்கு மேல் சேமிக்கப்பட்டிருக்கும் என்றால் அதற்கு ஸக்காத் கொடுக்க வேண்டும். ஆனால் அவர்கள் கொடுப்பதில்லை. எனவே அல்லாஹ் அனில் லக்வி முக்ரிலூன் என்று கூறுகின்றான்.

அவர்கள் ஸக்காத் கொடுக்கும் போது தான் வீணானவற்றிலிருந்து விலகி இருக்கின்ற நிலை அவர்களிடம் உருவாகும். ஸக்காத் கொடுக்கும் போது தான் வீணானவற்றிலிருந்து தப்பிக்கின்ற நிலை இருக்கும். தொழுகை சரியான முறையில் நிறைவேற்றப்பட்டால் உருக்கமும், பணிவும் ஏற்படும். அந்நிலையில் வீணானவற்றிலிருந்தும் அவர்கள் தப்பிப்பார்கள்.

வீணானவற்றிலிருந்து தப்பிக்கின்ற போது பொருள் தியாகத்தின் பக்கம் கவனம் ஏற்படும். பொருள் தியாகம் செய்யக் கூடியவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்றால் அவர்கள் வீணானவற்றிலிருந்து விலகி இருப்பார்கள். ஒவ்வொரு விஷயமும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையதாக உள்ளது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ஸக்காத் கொடுப்பது என்பது வீணானவற்றிலிருந்து விலகி இருப்பதன் கட்டாய விளைவாகும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 10 பக்கம் 64 – 1985 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

எனவே தொழுகை என்பது வீணானவற்றிலிருந்து விலகி இருப்பதன் பக்கம் கவனமூட்டுகின்றது. வீணானவற்றிலிருந்து விலகி இருப்பது என்பது அல்லாஹ்வின் கட்டளைகளை நிறைவேற்றுவதன் பக்கம் அழைத்துச் செல்கின்றது. பின்னர் தமது செல்வத்தை ஆகுமற்ற வழிகளில் செலவிட்டு அல்லாஹ்வின் கோபத்திற்கு ஆளாகுவதற்கு பகரமாக அல்லாஹ்வின் வழியில் செலவிடுவதன் பக்கம் கவனமூட்டுகின்றது.

எனவே அன்னார் அல்லாஹ்வின் வழியில் செலவிடுவது என்பது மனிதனை ஏராளமான வீணான காரியங்களிலிருந்து காப்பாற்றுகின்றது என்று கூறுகின்றார்கள்.

அடுத்து அல்லாஹ் கிலாஃபத் எனும் அருட்கொடையைப் பெறக் கூடியவர்கள் கட்டுப்படுதலின் தரத்தை மேம்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அறிவுரை வழங்குகின்றான்.

ஒரு ஹதீஸில் வருகிறது. ஹஸ்ரத் இபாதா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள். நாங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் செவிபேற்போம்; கட்டுப்படுவோம் என்ற விஷயத்தில் பைஅத் செய்தோம். எங்களுக்கு அந்த விஷயம் பிடித்திருந்தாலும் சரி; பிடிக்காவிட்டாலும் சரியே.

நாங்கள் எங்கிருந்தாலும் உரிமை படைத்தவர்களுக்கு எதிராக சண்டையிட மாட்டோம். உண்மையில் நிலைத்து நிற்போம். அல்லது உண்மையானவற்றையே பேசுவோம். அல்லாஹ்வின் விவகாரங்களில் குற்றம் சாட்டுபவரின் குற்றச்சாட்டுகளுக்கு அஞ்ச மாட்டோம்.

(சஹீஹ் புகாரி, கிதாபுல் அஹ்காம் ஹதீஸ் எண் 7199)

இதனை அன்னார் தனக்காக மட்டும் கூறவில்லை. மாறாக, அடுத்து கிலாஃபத் அமைப்பு தொடர்பாகவும் இதே வழிகாட்டலையே அன்னார் வழங்கி உள்ளார்கள். ஹதீஸில் வருகின்றது. ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

வறுமை, செல்வச் செழிப்பு, மகிழ்ச்சி, துக்கம், உரிமை பறிக்கப்படுதல் அல்லது முன்னுரிமை வழங்கப்படுதல் சுருக்கமாக எல்லா நிலையிலும் ஆட்சியாளர்களின் கட்டளைகளை கேட்பதும் கட்டுப்படுவதும் உங்கள் மீது கடமையாகும்.

(சஹீஹ் முஸ்லிம், கிதாபுல் அமாரத் ஹதீஸ் எண் 4754)

கட்டுப்படுதல் தொடர்பாக விளக்கியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

அல்லாஹ் மற்றும் அவனது தூதர் மற்றும் ஆட்சியாளர்களுக்கு கட்டுப்படுங்கள். கட்டுப்படுதல் எப்படிப்பட்ட விஷயம் என்றால், உண்மையான உள்ளத்துடன் அது செய்யப்பட்டால் உள்ளத்தில் ஒரு ஒளியும் இன்பமும் உருவாகின்றது. கட்டுப்படுதலில் எந்த அளவு கஷ்டம் இருக்கின்றதோ அந்த அளவிற்கு இறை வணக்கங்களை மேற்கொள்வதில் இருப்பதில்லை.

சுருக்கமாக, ஆயினும் நிபந்தனை என்னவென்றால் உண்மையான கட்டுப்படுதல் இருக்க வேண்டும். அதுவே மிக கஷ்டமான காரியமாகும். கட்டுப்படுதலில் தமது மன இச்சைகளை தியாகம் செய்வது மிக அவசியமானதாகும். அதைத் தவிர்த்து கட்டுப்படுதல் நிகழாது. மன இச்சைகள் எப்படிப்பட்ட விஷயம் என்றால் பெரும் பெரும் ஏகத்துவவாதிகளின் உள்ளத்திலும் கூட பெரும் சிலைகளாக உருவெடுக்க முடியும். உள்ளத்தில் ஆசைகள் இருக்குமென்றால் பின்னர் அது சிலைகளாகி விடுகின்றது. அந்நிலையில் கட்டுப்படுதலுக்கான வாய்ப்பே இல்லாமல் போய் விடும். பாருங்கள். சஹாபாக்கள் மீது எந்த அளவுக்கு அருள் இருந்தது.

அவர்கள் எந்த அளவுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு கட்டுப்படுவதில் தங்களை மாய்த்துக் கொண்ட சமுதாயமாக இருந்தார்கள். எந்த சமுதாயத்திடமும் கட்டுப்படுதலின் ஆன்மா உருவாக்கப்படாத வரை சமுதாய உணர்வையும் ஒற்றுமையையும் ஏற்படுத்த முடியாது என்பது உண்மையாகும்.

கருத்து வேறுபாடுகள் மற்றும் பிரிவினைகள் மேலோங்கி நிற்கும் என்றால் அது வீழ்ச்சி மற்றும் அழிவிற்கான அடையாளங்களாகும். முன்னேற்றம் இருக்காது. முஸ்லிம்களின் வீழ்ச்சி மற்றும் பின்னடைவிற்கான காரணங்கள் கருத்து வேறுபாடுகள் மற்றும் பிரிவினைகளாகும்.

எனவே கருத்து வேறுபாடுகளை கைவிட்டு விட்டு எவருக்கு கட்டுப்படும் படி இறைவன் கூறியுள்ளானோ அவருக்கு கட்டுப்பட்டு விட்டால் பின்னர் அவர்கள் என்ன விரும்புகின்றார்களோ அது நிகழ்ந்து விடும். அல்லாஹ்வின் கரம் ஜமாஅத்தின் மீது இருக்கும். அல்லாஹ் ஏகத்தவத்தை விரும்புகின்றான். இதுவே அதன் இரகசியமாகும். கட்டுப்படாத வரை ஜமாஅத்தில் ஒருமைப்பாடு உருவாக முடியாது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது காலத்தில் சஹாபாக்கள் பெரும் பெரும் சிந்தனையாளர்களாக இருந்தார்கள். இறைவன் அவர்களை அப்படியே படைத்திருந்தான். அவர்கள் அரசியல் விஷயங்களையும் நன்கு அறிந்திருந்தார்கள்.

ஏனென்றால் இறுதியில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி), ஹஸ்ரத் உமர் (ரலி) மற்றும் ஏனைய சஹாபாக்கள் கலீஃபா ஆக்கப்பட்ட பிறகு அவர்கள் ஆட்சி அதிகாரங்களை எந்த அளவிற்கு சிறப்பாக நிறைவேற்றினார்கள் என்பதை பார்க்கும் போது அவர்கள் பெரும் சிந்தனையாளர்களாக இருந்தது தெரிய வருகின்றது.

ஆனால் அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது முன்னிலையில் அவர்களது நிலை எவ்வாறிருந்து என்றால் அன்னார் ஒன்றை கூறி விட்டால் சஹாபாக்கள் அதற்கு எதிரில் தங்களது கருத்தை துச்சமாக எண்ணுவார்கள். தமது எந்த அறிவார்ந்த விஷயங்களையும் முன்வைக்க மாட்டார்கள்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் எதனை கூறினார்களோ அதனையே செயல்படுத்தத்தக்க விஷயமாக கருதினார்கள். அவர்கள் கட்டுப்படுதலில் எந்த அளவுக்கு தங்களை மாய்த்துக் கொண்டிருந்தார்கள் என்றால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வுளு செய்து எஞ்சிய தண்ணீரில் அருளைத் தேடினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்)

அவர்களின் அருளுக்குரிய உமிழ்நீரை பரக்கத்திற்குரியதாக கருதினார்கள். சஹாபாக்களிடம் இந்த கட்டுப்படுதலுக்கான உணர்வு இல்லாமல் இருந்திருந்தால் தங்களின் கருத்தையே மேன்மைமிக்கதாக கருதியிருந்தால் பிரிவினை உண்டாகி இருக்கும். அவர்களால் இந்த அளவுக்கு உயர்ந்த அந்தஸ்த்தை அடைந்திருக்க முடியாது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

என்னைப் பொருத்தவரை ஷியாக்கள் மற்றும் சன்னிகளுக்கான சண்டையை முடிவுக்கு கொண்டு வருவதற்கு இந்தவொரு சான்றே போதுமானதாகும். சஹாபாக்களுக்கு மத்தியில் எவ்வகையிலும் சண்டையோ பகைமையே பிரிவினையோ இருந்ததில்லை. ஏனென்றால் அவர்களின் முன்னேற்றமும், வெற்றிகளும் அவர்கள் தங்களுக்குள் ஒன்றுபட்டவர்களாக இருந்தார்கள் என்பதை எடுத்துரைக்கின்றன.

அவர்களுக்கு எவரிடமும் எந்த பகைமையும் இருந்ததில்லை. அறிவற்ற இஸ்லாத்தின் எதிரிகள் கூறுகின்றனர். இஸ்லாம் வாளினால் பரவியது என்று கூறுகின்றனர். ஆனால் நான் கூறுகின்றேன். அது சரியல்ல. உண்மையான விஷயம் என்னவென்றால், அவர்களின் உள்ளத்தின் நாளங்கள் கட்டுப்படுதல் எனும் உணர்வினால் நிறைந்து வழிந்தோடின.

அது அவர்களின் இந்த கட்டுப்படுதல் மற்றும் ஒருமைப்பாட்டின் விளைவாக இருந்தது. அதன் மூலமாக அவர்கள் பிறரின் உள்ளங்களை கொள்ளை கொண்டனர். எனது மார்க்கம் என்னவென்றால், அவர்களுக்கு தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக மட்டுமே அவர்களுக்கு வாள் ஏந்த நேரிட்டது. அவர்கள் வாள் ஏந்தாமல் இருந்திருந்தாலும் தமது நற்பண்புகளால் உலகத்தை அவர்கள் வெற்றி கொண்டிருப்பார்கள்.

உள்ளத்திலிருந்து வெளி வருகின்ற அறிவுரை நிச்சயமாக உள்ளத்தை வெற்றி கொண்டு விடும். அவர்கள் ஒரு உண்மையை ஒப்புக் கொண்டிருந்தார்கள். அதனை அவர்கள் உண்மையான உள்ளத்துடன் ஏற்றுக் கொண்டிருந்தார்கள். அதில் எவ்வித பகட்டும் இருந்ததில்லை. உண்மையே அவர்களின் வெற்றிக்கான காரணியாக இருந்தது.

உண்மை என்னவென்றால், உண்மையாளர் தனது உண்மை எனும் வாளினையே பயன்படுத்துகின்றார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முகத்தில் இறைவனின் ஒளி நிறைந்திருந்தது. அதில் இறைவனது கம்பீரமும், அழகும் படிந்ததிருந்தது. அது எண்ணற்ற உள்ளங்களை கவர்ந்து வந்தது.

பின்னர் அன்னாரது ஜமாஅத் தூதருக்கு கட்டுப்படுதலில் மாபெரும் முன்மாதிரியை வெளிப்படுத்தியது. அதில் உறுதிப்பாட்டுடன் நிலைநின்றது. அவர்களை பார்க்கின்றவர்கள் தன்னையும் அறியாமல் அவர்கள் பக்கம் ஈர்க்கப்பட்டனர்.

சுருக்கமாக, சஹாபாக்களிடமிருந்து அந்த ஒற்றுமை மற்றும் கட்டுப்படுதலுக்கான தேவை இப்போதும் உள்ளது. ஏனென்றால், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது கைகளால் தயாராகி வருகின்ற இந்த ஜமாஅத்தை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது அந்த ஜமாஅத்துடன் அல்லாஹ் இணைத்திருக்கின்றான். ஜமாஅத்தின் முன்னேற்றம் என்பது இது போன்ற மக்களின் முன்னுதாரனங்களின் மூலமாகவே நடைபெறும். அவர்கள் முற்றிலும் தங்களை இறை போதனைகளுக்கேற்ப ஆக்கிக் கொள்வார்கள். கட்டுப்படுதலிலும் உயர்ந்த தரத்தை வெளிப்படுத்துவார்கள். இது போன்ற நபர்களின் முன்னுதாரங்கள் மூலமாகவே வெற்றிகள் கிடைக்கும்.

எனவே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஜமாஅத்தை சார்ந்தவர்களாக நீங்கள் இருந்து கொண்டு சஹாபாக்களுடன் இணையும் ஆசை இருக்குமென்றால் நீங்களும் சஹாபாக்களைப் போன்ற முன்னுதாரணங்களை வெளிப்படுத்துங்கள். கட்டுப்படுதலிலும் ஒருவருக்கொருவர் அன்பு செலுத்துவதிலும், சுருக்கமாக, ஒவ்வொரு செயலிலும், ஒவ்வொரு விஷயத்திலும் நீங்கள் சஹாபாக்களின் முன்னுதாரணத்தை வெளிப்படுத்துங்கள்.

(தஃப்ஸீர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) – சூரா நிஸா வசனம் 59)

இதனை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தனது சஹாபாக்களிடம் அக்காலத்தில் கூறினார்கள். ஆயினும் ஜமாஅத்தின் முன்னேற்றத்தை எப்போதும் நிலைநாட்ட வேண்டுமென்றால், கிலாஃபத் அமைப்பை நிரந்தரமானதாக ஆக்க முயற்சி செய்ய விரும்பினால் பின்னர் அதற்காக முன்னுதாரணங்களையும் நிரந்தர மனப்பான்மையுடன் ஜமாஅத்தினுள் வெளிப்படுத்த வேண்டிய அவசியம் உள்ளது.

அப்போது தான் முன்னர் கிடைத்து வந்த முன்னேற்றங்கள் தற்போதும் கிடைக்க முடியும். இதுவே அல்லாஹ்வின் அருட்களிலிருந்து பயன் பெறுவதற்கு தேவையான தரமாகும். நாம் நமது இறைவணக்கத்தின் தரத்தையும் உயர்த்த வேண்டும். நாம் நமது தொழுகைகளையும் பாதுகாக்க வேண்டும். நமது ஒவ்வொரு சொல்லையும், செயலையும் எல்லா வகையான இணை வைத்தலிலிருந்தும் முற்றிலுமாக பாதுகாக்க வேண்டும்.

நமது செல்வத்தை அல்லாஹ்வின் வழியில் நாம் செலவிட வேண்டும். கிலாஃபத்துடனான நன்றியுணர்வு மற்றும் கட்டுப்படுதலில் எப்பொழுதும் உயர் தரத்தை அடைய வேண்டும். அப்போது தான் கிலாஃபத் எனும் அருள் மற்றும் அத்துடன் இறைவன் வைத்துள்ள பயன்களை நாம் பெற முடியும். அதன் மூலமே கியாமத் நாள் வரை நிலைபெறும் கிலாஃபத்துடன் நாம் நிலைத்திருக்க முடியும். மேலும் நாம் நமது அடுத்த தலைமுறையினரையும் அதனுடன் நம்மால் இணைத்து வைத்திருக்க முடியும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இந்த நிரந்தரமான கிலாஃபத்தைப் பற்றி நற்செய்தி வழங்கியவாறு கூறுகின்றார்கள்: உங்களுக்கு இரண்டாவது வல்லமையை காண்பதும் அவசியமாகும். அது வருவது உங்களுக்கு சிறந்ததாகும். ஏனென்றால் அது நிரந்தரமானதாகும். அதன் தொடர் கியாமத் வரை அறுந்து விடாது. நான் செல்லாத வரை இரண்டாவது வல்லமை வர முடியாது. நான் சென்று விட்ட பிறகு இறைவன் அந்த இரண்டாவது வல்லமையை உங்களுக்காக அனுப்பி வைப்பான். அது எப்போதும் உங்களுடன் இருக்கும். இது பற்றி இறைவன் பராஹீனே அஹ்மதிய்யாவில் வாக்குறுதி அளித்துள்ளான். அந்த வாக்குறுதி எனது இருப்பை பற்றி அல்ல. மாறாக, அது உங்களைப் பற்றிய வாக்குறுதியாகும்.

எனவே இறைவன் கூறுகின்றான். நான் உன்னைப் பின்பற்றக்கூடிய உனது இந்த ஜமாஅத்தை கியாமத் நாள் வரை மற்றவர்கள் மீது மேலோங்கச் செய்வேன். எனவே பிரிவிற்கான நாட்கள் வருவது உங்களுக்கு அவசியமாகும். ஏனென்றால் அதன் பிறகு நிரந்தரமான நாட்கள் வரும். நமது இறைவன் வாக்குறுதிகளில் உண்மையாளன் ஆவான். அவன் வழங்கிய வாக்குறுதிகள் அனைத்தையும் உங்களுக்கு உண்மையாக்கி காட்டுவான்.

இந்த நாட்கள் உலகத்தின் கடைசி நாட்கள் ஆகும். ஏராளமான ஆபத்துகள் இறங்குவதற்கான நேரமாகும். ஆயினும் இறைவன் கூறிய விஷயங்கள் அனைத்தும் முழுமை பெறாத வரை இந்த உலகம் நிலைத்து நிற்பது அவசியமானதாகும். நான் இறைவன் புறமிருந்து ஒரு வல்லமையாக வெளிப்பட்டுள்ளேன். நான் இறைவனின் முழுமையான வல்லமையாக உள்ளேன். எனக்குப் பிறகு இரண்டாம் வல்லமையின் தோற்றமாக சிலர் வெளிப்படுவார்கள்.

(ரிஸாலா அல் வஸிய்யத், ரூஹானி கஸாயின் தொகுதி 20 பக்கம் 305,306)

எனவே அல்லாஹ் நமக்கு இந்த அருளை செய்துள்ளான். சுமார் 110 வருடங்களாக நாம் அல்லாஹ்வினுடைய இந்த அருளின் காட்சியையும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடன் செய்யப்பட்ட வாக்குறுதியையும் நாம் பார்த்து வருகின்றோம்.

அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பைஅத்தின் கீழ் வந்துள்ள ஒவ்வொருவரையும் அல்லாஹ்வின் வழிகாட்டுதல்களை கருத்தில் கொண்டவாறு கிலாஃபத்தின் அருளிலிருந்து எப்போதும் பயன் பெற்றுச் செல்லக் கூடியவர்களாக ஆக்குவானாக.

கடந்த வாரமும் நான் துஆவிற்காக கவனமூட்டியிருந்தேன். நான் மீண்டும் கூறுகின்றேன். பாகிஸ்தான் மக்களுக்காக துஆ செய்யுமாறு குறிப்பாக கூறியிருந்தேன். பாகிஸ்தானியர்களும் தங்களுக்காக குறிப்பாக கவனம் செலுத்த வேண்டும். தங்களது தொழுகைகளையும், நவாஃபில்களையும், இறை தியானத்தையும் முன்பை விட அதிகமாக செய்தல் வேண்டும். அல்லாஹ் அனைவருக்கும் இதற்கான பாக்கியத்தை வழங்குவானாக. ஆமீன்.

EDITOR
M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
A. KHALEEL AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

The Weekly **BADAR** Qadian
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

பதர்
வாரப் பத்திரிகை
காதியான்

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 3 Thursday 5 July 2018 Issue No. 27

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

*(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)*

فَلَمَّا تَوَفَّيْتَنِي என்ற இந்த வசனத்திற்கு ஈஸா (அலை) அவர்கள் பூத உடலுடன் வானத்திற்கு உயர்த்தப்பட்டார் என்ற பொருள் இருக்குமென்றால் இவர் உயிருடன் இருக்கின்றார் என்ற எண்ணம் இரட்சக்கணக்கானவர்களை நாசமாக்கி இருக்கையில் இறைவன் அப்படிப்பட்டவர்களின் மரணத்தைப் பற்றி முழுக்குர்ஆனிலும் ஏன் எங்குமே குறிப்பிடவில்லை?

இது எவ்வாறென்றால் மக்கள் இணைவைப்பவர்களாகவும் மார்க்கப்பற்று அற்றறவர்களாகவும் ஆகுவதற்காகவே அவரை இறைவன் என்றென்றும் உயிரடன் இருக்க அனுமதித்திருக்கின்றான் என்றும், இது மக்களது தவறு இல்லை; மாறாக, மக்களை வழிகெடுக்கும் பொருட்டு இவற்றையெல்லாம் இறைவனே செய்திருக்கின்றான் என்றும் ஆகிவிடும். மஸீஹின் மரணம் இன்றி சிலுவைக் கொள்கைக்கு மரணம் வரமுடியாது என்பதை நிங்கள் நன்றாக நினைவில் கொள்ளுங்கள். திருக்குர்ஆனின் போதனைக்கு மாறாக அவரை உயிருள்ளவராக நம்புவதால் என்ன பயன்?

ஆகவே இந்த மார்க்கம் உயிர்பெரும் பொருட்டு அவரை மரணிக்கச் செய்யுங்கள். இறைவன் தனது திருவசனங்களால் மஸீஹ் உடைய மரணத்தைப் பற்றி வெளிப்படுத்தியுள்ளான். மேலுல் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மிஃராஜ் இரவில் அவரை மரணித்தவர்களுடன் பார்த்திருக்கிறார்கள். நீங்கள் இப்போதும் ஒப்புக் கொள்ளவில்லையென்றால் இது எப்படிப்பட்ட ஈமாம் (நம்பிக்கை) ஆக இருக்கிறது? இறைவனின் சொல்லை விட மனிதர்களின் அறிவிப்புகளுக்கு முக்கியத்துவம் அளிக்கின்றீர்கள்? இது என்ன மார்க்கம்? ☆

நமது ரஸூல் (ஸல்) அவர்கள் மரணித்த ஆன்மாக்களில் ஈஸாவையும் நான் பார்த்திருக்கிறேன் என்று சாட்சியம் கூறியது மட்டுமலலாது இதற்கு முன் எவரும் உயிருடன் இருந்ததில்லை என்பதையும் தம்முடைய மரணத்தைக் கொண்டு வெளிப்படுத்தி விட்டார்கள். எனவே நமது எதிரிகள் திருக்குர்ஆனை கைவிடுவதைப் போன்று சுன்னத்தையும் விட்டு விடுகிறார்கள். ஏனெனில் மரணம் அடைவது நமது திருநபியின் சுன்னத் ஆகும். ஆனால் ஈஸா (அலை) அவர்கள் உயிருடன் இருக்கையில் நமது நபி (ஸல்) அவர்கள் மரணம் அடைவது அவர்க020ளுக்கு இழுக்காகும். ஆகவே நீங்கள் ஈஸாவின் மரணத்தை ஒப்புக் கொள்ளாதவரை நீங்கள் சுன்னத்தை கடைபிடிப்பவர்களும் அல்லர். திருக்குர்ஆனை கடைபிடிப்பவர்களும் அல்லர்.

மேலும் நான் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களது மகத்துவத்தை நிராகரிப்பவன் அல்லன். முஹம்மதின் சமுதாயத்தில் தோன்றிய மஸீஹ் மூஸாவின் சமுதாயத்தில் தோன்றி மஸீவை விட மேன்மையானவர் என்று இறைவன் எனக்கு கூறிய போதிலும் நான் அவருக்கு மிகவும் கண்ணியம் அளிக்கிறேன். ஏனெனில் மஸீஹ் இப்னு மர்யம் இஸ்ரவேல் சமுதாயத்திற்கு காத்தமுல் குலஃபாவாக இருந்தது போல் நான் ஆன்மீகமான முறையில் இஸ்லாத்தில் காத்தமுல் குலஃபாவாக இருக்கிறேன். மேலும் மூஸாவுடைய சமுதயாத்தில் இப்னு மர்யம் வாக்களிக்கப்பட்ட மஸீஹாக இருந்ததைப் போல் நான் முஹம்மதிய்ய சமுதாயத்தில் வாக்களிக்கப்பட்ட மஸீஹாக இருக்கிறேன். அவருடைய பெயரைக் கொண்டிருக்கும் நான் அவரை பெரிதும் கண்ணியப்படுத்துகின்றேன். நான் மஸீஹ் இப்னு மர்யமுக்கு மதிப்பு அளிப்பதில்லை என்று என்னை குறை கூறுகிறவர் குழப்பத்தை உருவாக்கக் கூடியவரும் இட்டுக்கட்டி பேசக் கூடியவருமாவார். மஹீஹ் என்ன? நான் அவரது நான்கு சகோதரர்களையும் கௌரவிக்கிறேன். ☆

இந்த ஐந்து மக்களும் ஒரே தாயின் குமாரர்களாவர். இவர்களை மாத்திரமல்லாமல் நான் ஹஸ்ரத் மஹீஹ் அவர்களின் உண்மையான இரு சகோதரிகளையும் பரிசுத்தமானவர்களாக நம்புகிறேன். ஏனெனில் இப்பெரியவர்கள் அனைவரும் புனித மர்யமின் வயிற்றிலிருந்து வந்தவர்களாகர். மர்யமுடைய சிறப்புத் தன்மையென்னவெனில் அவர்கள் ஒரு குறிப்பிட்ட காலம் வரை தன்னை திருமணத்திலிருந்து தடுத்துக் கொண்டார்கள். பிறகு அவர்கள் கர்ப்பமுற்றிருந்த காரணத்தால் அவர்களின் சமுதாயத்தைச் சேர்ந்த பெரியோர்கள் மிகவும் வற்புறுத்தியதன் விளைவாக திருமணம் செய்து கொண்டார்கள்.

தவ்ராத்தின் போதனைக்கு மாறாக கர்ப்பமுற்றிருக்கையில் திருமணம் செய்ததேன்? கன்னியாக இருப்பேன் என்ற உடன்படிக்கை ஏன் அநீதியாக முறிக்கப்பட்டது? பலதார மணத்திற்கு அடித்தளம் அமைத்ததேன்? அதாவது தச்சன் யூசுஃபுக்கு முதல் மனைவி இருக்கையில் அவரை மணம் செய்ய மர்யம் ஒப்புக் கொண்டதேன்? என்றெல்லாம் மக்கள் ஆட்சேபணை செய்தாலும் இவை அனைத்தும் அவர்களுக்கு நிர்ப்பந்தத்தின் காரணத்தால் உண்டானவை என்றே நான் கூறுவேன். இந்நிலையில் (மர்யமாகிய) அவர் அனுதாபத்திற்குரியவரே அல்லாமல் ஆட்சேபணைக்குரியவர் அல்லர்.

(கிஷ்தி நூஹ், ரூஹானி கஸாயின் தொகுதி 19 பக்கம் 15–18)

---

☆ ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் மீண்டும் உலகிற்கு வர மாட்டார் என்று இந்த வசனத்திலிருந்து தெரிய வருகிறது. ஏனெனில் அவர் மீண்டும் உலகிற்கு வருபவராக இருந்தால் கிறித்தவர்கள் வழிகெட்டுப் போன விஷயத்தைப் பற்றி நான் ஒன்றும் அறியேன் என்ற ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் பதில் பொய்யாகிவிடுகிறது. மீண்டும் இந்த உலகிற்து வந்து நாற்பது ஆண்டுகள் இருந்த ஒருவர் தன்னை தெய்வமாக நம்பி வந்த கோடிக்கணக்கான கிறிஸ்வர்களை பார்த்தவர், சிலுவையை உடைத்து அனைத்து கிறிஸ்தவர்களையும் முஸ்லிம்களாக மாற்றியவர், கிறித்தவர்களின் வழிகெட்டுப் போன விஷயத்தைப் பற்றி நான் ஒன்று அறியேன் என்று இறுதி நாளில் இறைவன் முன்னிலையில் எவ்வாறு சாக்குக் கூற முடியும்?

☆ சிலுவை சம்பவத்திற்குப் பின்னர் மஸீஹும் அவரது தாயாரும் காஷ்மீர் பக்கம் சென்று விட்டதாக திருக்குர்ஆனின் ஒரு வசனத்தில் வெளிப்படையாகக் கூறப்பட்டிருக்கின்றது.

وَآوَيْنٰهُمَآ اِلٰى رَبْوَةٍ ذَاتِ قَرَارٍ وَّمَعِيْنٍ அதாவது நாம் ஈஸாவுக்கும் அவரது தாயாருக்கும் நீர் ஊற்றுகள் நிரம்பிய ஒரு குன்றின் மீது தங்குவதற்கு ஒரு இடத்தை அ ளித்துள்ளோம். அது தங்குவதற்கேற்ற வசதியான ஒரு இடமாகும். (23:51) இதில் இறைவன் காஷ்மீரின் சித்திரத்தை வரைந்துள்ளான். மேலும் ஆவா என்றும் சொல் அரபி அகராதியில் ஏதாவது ஆபத்து துன்பத்திலிருந்து அடைக்கலம் கொடுத்தல் என்பதற்காக வருகின்றது. சிலுவை சம்பவத்திற்கு முன் அடைக்கலம் கொடுக்க வேண்டிய காலகட்டம் எதுவும் ஈஸாவுக்கும் அவரது தாயாருக்கும் வரவில்லை. ஆகவே இறைவன் ஈஸாவையும் அவரது தாயாரையும் சிலுவை சம்வத்திற்குப் பின்னர் இந்த குன்றின் மீது அனுப்பி வைத்தான் என்பது தெளிவாகிறது. (நூலாசிரியர்)

☆ இயேசு மஸீஹுக்கு நான்கு சகோதரர்களும் இரு சகோதரிகளும் இருந்தனர். இவர்கள் அனைவரும் இயேசுவின் உண்மையான சகோதரர்கள் சகோதரிகளாவர். அதாவது இவர்கள் அனைவரும் யூசுஃப் மர்யமுடைய சந்ததிகளாவர். நான்கு சகோதரர்களின் பெயர்களாவன (1) யூதா (2)யஃகூப் (3) ஷம்வூன் (4) யோஸிஸ். இரு சகோதரிகளின் பெயர்களாவன. (1) ஆஸ்மா (2) லீத்யா.

நூல்: அபாஸ்டாலிக் ரிகார்ட்ஸ் எழுத்தாளர் பாதிரிஜான் அமிலன் காயல்ஸ் இலண்டன் பதிப்பு. 1886 ஆம் ஆண்டு பக்கம் 159, 166 காண்க. (நூலாசிரியர்)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad